Registered as a news paper.

பக்கங்கள்: பத்து

விலை: ரூபா 6.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மலர் : 02 திருவள்ளுவர் ஆண்டு: 2034 ஐப்பசி 23 ஆம் நாள், ஹிஜ்ரி 1425 றம்ழான் 14 (09.11.2003) ஞாயிற்றுக்கிழமை இதழ்:40

மொறாயஸ் ஒளிச்சுடர்
பல், மூக்குக் கண்ணாடியகம்
இல.05 பலாலி வீதி (அப்பலோ கிளினிக் முன்), யாழ்.
- பல் கட்டுவதற்கும்,
- பற்களுக்கு கிளிப் போடுவதற்கும்,
- இலவச கண் பரிசோதனை செய்து, நவீன ரக பிறேம்களில் மூக்குக் கண்ணாடிகளைப் பெறவும்.
(1962 முதல் யாழ்.வெலிங்டன் திரையரங்கு முன்பாக இயங்கியது)
(சி-1761)

## கொழும்பில் தேடுதல் நடவடிக்கை; சந்தேகத்தின்பேரில் 45 பேர் கைது!

(கொழும்பு)

கொழும்பில் இராணுவமும், பொலிஸாரும் இணைந்து நடத்திய தேடுதல் நடவடிக்கையின் போது, 45 பேர் சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டிருப்பதாக - கொழும்பு பிரதி பொலீஸ் மா அதிபர் அலுவலகம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்படுகின்றது.

நேற்றுமுன்தினம் காலை 6 மணிமுதல் நெற்று காலை 6 மணிவரையிலான 24 மணித்தியாலத்துக்குள் நடாத்தப்பட்ட தேடுதலின்போதே இந்த கைதுகள் இடம்பெற்றதாக - அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

128 வீதித் தடைகள் போடப்பட்டு சோதனைகள் நடத்தப்பட்டுள்ளதுடன் 64 ரோந்து நடவடிக்கைகளும் மேற்கொண்டதாக அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா மீது 3 நம்பிக்கையில்லாப் பிரேரணைகள்!

(கொழும்பு)

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்வுக்கு எதிராக, மூன்று வெவ்வேறு நம்பிக்கையில்லாப் பிரேரணைகளை கொண்டுவருவதற்கு ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் தீர்மானித்திருப்பதாக நீதி அமைச்சர் டபிள்யூ.ஜே.எம்.லொக்குபண்டார தெரிவித்தார்.

பாதுகாப்பு, உள்துறை மற்றும் ஊடகத்துறை அமைச்சுக்களுக்கு பொறுப்பான அமைச்சர் என்ற அடிப்படையிலேயே, ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா மீது, தனித்தனியாக நம்பிக்கையில்லா பிரேரணைகள் கொண்டுவரப்படவுள்ளது.

ஜனாதிபதிக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டுவருவதாயின், நாடாளுமன்றில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை ஆதரவு இருக்கவேண் (10 ஆம் பக்கம் பார்க்க)

# சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிக்க நாடாளுமன்றத்தைக் கூட்டவேண்டும்!

## ஜனாதிபதியிடம் பீரிஸ் வலியுறுத்து



(கொழும்பு)

**விடுதலைப் புலிகளுடன் சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கு நாடாளுமன்றம் கூட்டப்படவேண்டியது அவசியமாகும். சமாதான முயற்சிகள் தங்கு, தடையின்றி தொடர்வதற்காக நாடாளுமன்றத்தை ஜனாதிபதி மீளவும் கூட்ட நடவடிக்கை எடுக்கவேண்டுமென - நீதி அரசியலமைப்பு விவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் வலியுறுத்தியுள்ளார்.**

விடுதலைப் புலிகளுடன் சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கு நாடாளுமன்றம் அவசியமாகும். இதனைக் கவனத்திற்கொண்டு, ஜனாதிபதி மீண்டும் நாடாளுமன்றைக் கூட்டவேண்டும்.

இவ்வாறு அரசியலமைப்பு விவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

தமிழீழ விடுதலைப் புலிகள், அரசாங்கத்திடம் கையளித்துள்ள வடக்கு - கிழக்கிற்கான இடைக்கால நிர்வாகம் தொடர்பான திட்டவரைபு குறித்து அரசாங்கத்தின் நிலைப்பாடுகளை விளக்கும் செய்தியாளர் மாநாட்டில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றும்போது மேலும் தெரிவித்ததாவது,

சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கு, விடுதலைப் புலிகள் சமர்ப்பித்துள்ள இடைக்கால நிர்வாகம் குறித்த திட்டவரைபுகள் தொடர்பான பேச்சுக்களை ஆரம்பிக்க வேண்டும். இதற்காக, திட்டவரைபில் உள்ள முரண்பாடுகளுக்கு உடன்பாடு எட்டப்பட (10 ஆம் பக்கம் பார்க்க)

## தொண்டர் படை தளபதியாக சூல செனவிரத்ன!

(கொழும்பு)

இராணுவத்தின் தொண்டர் படைத்தளபதியாக மேஜர் ஜெனரல் சூல செனவிரத்ன நியமிக்கப்பட்டுள்ளார். இவர் கடந்த வியாழக்கிழமை காலை தனது கடமையை பொறுப் பேற்றுக்கொண்டார்.

இதேவேளை, இராணுவ அதிகாரிகளின் இயக்குனராக மேஜர் ஜெனரல் பரமி குலதுங்க நியமிக்கப்பட்டுள்ளார்.

## கூட்டமைப்பு ஆராய்வு!

(கொழும்பு)

கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுக் கூட்டம் தமிழர் விடுதலைக் கூட்டணியின் கொழும்பு அலுவலகத்தில் நடைபெற்றது.

நேற்று நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் ஜனாதிபதியின் நடவடிக்கையால்- நாட்டில் ஏற்பட்டுள்ள அரசி

## முன்னாள் இராணுவத் தளபதி வீரதுங்க மரணம்



(கொழும்பு)

முன்னாள் இராணுவத் தளபதியும், கூட்டு நடவடிக்கை பொதுக் கட்டளை அதிகாரியாக இருந்தவருமான ஜெனரல் திஸ்ஸ வீரதுங்க நேற்றுமுன்தினம் கொழும்பில் காலமானார்.

இலங்கை இராணுவத்தில் முதலாவது கடெற் அதிகாரிகள் பிரிவில் இணைந்து பயிற்சி பெற்ற

### உயர் நீதிமன்றத் தீர்ப்பினால்

# ஏழு இராணுவ அதிகாரிகள்

கத்தில் நடைபெற்றது.

நேற்று நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் ஜனாதிபதியின் நடவடிக்கையால்- நாட்டில் ஏற்பட்டுள்ள அரசியல் நிலைப்பாடு குறித்தும், நாடாளுமன்றம் ஒத்திவைக்கப்பட்டுள்ளது தொடர்பாகவும், ஆராயப்பட்டது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் செயலாளர் இரா.சம்பந்தன் தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில், நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை.சேனாதிராஜா, கஜேந்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதி சந்திரிகா ஒழுக்காற்று நடவடிக்கை

(கொழும்பு)

தொழில் அமைச்சின் செயலாளர் ரஞ்சித் பெர்ணான்டோ மீது, ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க, ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா உத்தரவிட்டுள்ளதாக ஜனாதிபதி செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா நேற்று முன்தினம் நாடு திரும்பிய போது அவரைக் கட்டுநாயக்கா விமான நிலையத்தில் வரவேற்க, முதலீட்டுச் சபையின் கீழ் சுதந்திர வர்த்தக வலயத்திலுள்ள அனைத்து தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு ஒழுங்குகளைச் செய்து கொடுக்குமாறு தொழில்

(10 ஆம் பக்கம் பார்க்க)

# ஏழு இராணுவ அதிகாரிகள் ஓய்வுபெறவேண்டிய நிலை!

(கொழும்பு)

பாதுகாப்பு அதிகாரங்கள் தொடர்பாக, உயர்நீதிமன்றம் கடந்த புதன் கிழமை அளித்த தீர்ப்பையடுத்து, இராணுவத்திலுள்ள ஏழு மேஜர் ஜெனரல் தர அதிகாரிகள் பதவியிலிருந்து விலகிச்செல்ல வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

ஓய்வுபெறும் வயதெல்லையை அடைவதற்கு முன்னர், மேஜர் ஜெனரல் பதவியில் மூன்று ஆண்டுகள் சேவையாற்றிய இராணுவ அதிகாரிகளுக்கு சேவை நீடிப்பு வழங்கப்படுவதை உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பு தடைசெய்துள்ளது. இதன்படி இராணுவத்தில் பணியாற்றும் ஏழு மூத்த அதிகாரிகள் பதவியிலிருந்து விலகிச் செல்லவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

இராணுவத் தலைமையதிகாரி மேஜர் ஜெனரல் லொகான் குணவர்த்தன பிரதித் தலைமை அதிகாரி சாந்த கொட்டேகொட, மேஜர் ஜெனரல் சூல செனவிரத்ன, மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகா, மேஜர் ஜெனரல் சுசில் சந்திரபால, மேஜர் ஜெனரல் நந்த

(10 ஆம் பக்கம் பார்க்க)

### தேசிய அரசு அமைக்க

# ஜனாதிபதி விடுத்த அழைப்புக்கு சிலதினங்களில் பிரதமர் பதில்!

(கொழும்பு)

தேசிய அரசு அமைப்பதற்கு வருமாறு ஜனாதிபதி விடுத்த அழைப்பு தொடர்பாக பிரதமர் இன்னும்சில தினங்களில் பதிலளிக்கவுள்ளார்.

இவ்வாறு அரசாங்கப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார். தேசிய புனரமைப்புக்கு, தேசிய அரசாங்கம் ஒன்றை அமைப்பதற்கு வருமாறு நாடாளுமன்றில் அங்கம் வகிக்கும் அனைத்துக் கட்சிகளுக்கும் ஜனாதிபதி நேற்றுமுன்தினம் நாட்டு மக்களுக்கு உரையாற்றும்போதே இவ் அழைப்பு விடுத்திருந்தார். இந்தவிடயம் தொடர்பாக பிரதமர் இன்னும் சில தினங்களில் அமைச்சரவையில் இதுபற்றி ஆராய்ந்து தீர்மானம் எடுத்தபின் ஜனாதிபதிக்கான பதிலை அறிவிப்பார் என அந்தப்பேச்சாளர் மேலும் தெரிவித்தார்.

இலங்கை இராணுவத்தில் முதலாவது கடேற் அதிகாரிகள் பிரிவில் இணைந்து பயிற்சி பெற்ற இவர், சண்டுறுத்திலுள்ள றோயல் இராணுவ அக்கடமியில் பயிற்சி

(10 ஆம் பக்கம் பார்க்க)

## பொ.ஐ.முவின் நிறைவேற்றுக் குழு கூட்டம்

(கொழும்பு)

பொதுஜன ஐக்கிய முன்னணியின் நிறைவேற்றுக் குழுக்கூட்டம் நாளை கொழும்பில் நடைபெறவுள்ளது.

இந்தக்கூட்டத்தில் விடுதலைப் புலிகள் அரசாங்கத்திடம் சமர்ப்பித்துள்ள இடைக்கால நிர்வாகத் திட்ட வரைபு தொடர்பாக ஆராயப்படவுள்ளதாக பொ.ஐ.முன்னணியின் வட்டாரங்கள் தெரிவிததுள்ளன.

## ஐ.தே.க. உறுப்பினர்களால் தாக்கப்பட்டாராம்!

(கொழும்பு)

ஜனாதிபதி சந்திரிகாவின் நடவடிக்கைகளுக்கு ஆதரவாக, தேசிய எதிர்ப்பு முன்னணியினர் நேற்று முன்தினம் நடத்திய பேரணியில் கலந்துகொண்ட ஒருவரை, ஐக்கிய தேசியக் கட்சியின் ஆதரவாளர்கள் தாக்கியதாகப் புகார் தெரி

(10 ஆம் பக்கம் பார்க்க)

EXPOAIR
your friend in the skies...
இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை....
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021 ~ 2223891 2226297
0712348888 0712349999 074512666 012360290 012360291
email . jaffna @ expoavi . com.
(சி -1753)
எக்ஸ்போஎயார்
வான் வெளியில் உங்கள் தோழன்...

# ஜனநாயக விரோத முறையில் ஜனாதிபதி சந்திரிகா அதிகாரத்தைப் பயன்படுத்தியது கண்டிக்கத்தக்கது!

## சோசலிஸ சமத்துவக் கட்சி அறிக்கை

(கொழும்பு)

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க ஜனநாயக விரோதமான முறையில் அதிகாரத்தைப் பயன்படுத்தியதை மிகவும் வன்மையாக கண்டனம் செய்கின்றோம். பாதுகாப்பு, உள்துறை, தகவல்துறை ஆகிய மூன்று முக்கிய அமைச்சுக்களையும் அவரது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவந்தமை மற்றும் அதைத் தொடர்ந்து, அவசரகால நிலைமையை பிரகடனம் செய்தமையும், ஒரு அரசியல் அமைப்பு சக்திக்கு சமமானதாகும். முற்றுமுழுதாக இராணுவத்தை சார்ந்திருக்கும் ஜனாதிபதி, முதற்படியாக இராணுவ சர்வாதிகாரத்தைத் திணிக்கும் நடவடிக்கையை எடுத்துள்ளார்.

இவ்வாறு ஜனாதிபதி சந்திரிகா மூன்று அமைச்சுப் பொறுப்புக்களை பறித்தமை தொடர்பாக, சோசலிஸ சமத்துவக் கட்சி கண்டித்து அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது. அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

தற்போது குமாரதுங்க பாதுகாப்பு படையின் மீதான முழுக்கட்டுப்பாட்டையும் தன்வசம் வைத்திருப்பதோடு, கொழும்பின் பிரதான மின்சார நிலையம், பல தூதரகங்கள் அதேபோல் அரசாங்கத்துக்குச் சொந்தமான தகவல்துறை, அச்சகங்கள் உட்பட்ட பிரதான இடங்களில் இராணுவத்தைப் பணியில் ஈடுபடுத்தியுள்ளார். அவர் இந்த நிறுவனங்களையும் அமைச்சுக்களையும் நிர்வகிப்பதற்கு, தனது சொந்த நிர்வாகிகளை நியமித்திருப்பதோடு, ஐக்கியதேசிய முன்னணி அரசாங்கம் தனது நடவடிக்கைகளை அரசியல் யாப்பின்படி சவால்செய்ய முடியாதவகையில் நாடாளுமன்றத்தை இரு வாரங்களுக்கு ஒத்திவைத்துள்ளார்.

மிகவும் குறிப்பிடத்தக்க வகையில் பரந்தளவிலான வேலையின்மை, தொழில் வெட்டு, தனியார் மயமாக்கல் மற்றும் சீரழிந்துவரும் சமூக நிலைமைகளுக்கு எதிராக தொழிலாளர்கள், இளைஞர்கள் மற்றும் கிராமப்புற மக்களும் கிளர்ந்தெழும் நிலைமைகளின்கீழ், அவசரகால நிலைமைப் பிரகடனமானது - இலங்கை மக்களின் அடிப்படை ஜனநாயக உரிமைகளை ஒழித்துக்கட்டுகிறது. அதன் உள்ளடக்கங்கள் எதுவும் இன்னமும் முழுமையாகத் தெளிவுபடுத்தப்படாத அதேவேளை, முன்னைய அவசரகாலப் பிரகடனங்கள் அரசியல் நடவடிக்கைகளைத் தடைசெய்ததுடன், கடுமையான செய்தித் தணிக்கையை திணிக்க ஜனாதிபதிக்கு அதிகாரம் அளித்ததோடு மற்றும் நினைத்த மாத்திரத்தில் கைதுசெய்வதற்கும், காவலில் தடுத்துவைப்பதற்கும், பொலிஸ் மற்றும் இராணுவத்துக்கு அதிகாரங்களை வழங்கியது.

சோஷலிஸ சமத்துவக் கட்சி, குமாரதுங்கவின் சதியைக் கண்டனம் செய்யும் அதேவேளை- லங்கா சமசமாஜக் கட்சியும், நவசமசமாஜக் கட்சியும் மற்றும் இலங்கை கம்யூனிஸக் கட்சியும் வகித்த குற்றம் மிக்க பாத்திரத்தையும் கண்டனம் செய்கின்றது. 'தொழிலாளர் அமைப்புக்கள்' என்று சொல்லப்படுகின்ற இந்த அமைப்புக்கள் - குமாரதுங்கவுடன் மற்றும் அவரது இராணுவ ஆதரவு சூழ்ச்சித் திட்டங்களோடு அணிசேர்ந்துகொண்டு, சர்வாதிகார இயந்திரத்துக்கு எண்ணெய் பூசும் நடவடிக்கைக்கு உதவுகின்றன.

1970 களில் தொழிலாளர் வர்க்கத்தின் எழுச்சிக்கு எதிராக - ஜே.ஆர்.ஜெயவர்த்தனவின் ஐ.தே.கட்சி அரசாங்கத்தால் அமுலுக்குக் கொண்டுவரப்பட்ட இலங்கையின் 1978 அரசியல் யாப்பில் உள்ளடங்கியுள்ள நிறைவேற்று மற்றும் சர்வாதிகார ஜனாதிபதி அதிகாரங்களை முழுமையாகப் பயன்படுத்தியே குமாரதுங்க அதிகாரத்தைப் பறிமுதல் செய்துள்ளார்.

முன்னர் - குமாரதுங்கவின் சிறிலங்கா சுதந்திரக் கட்சி எதிர்க்கட்சியாக இருந்தபோது, இந்த 'சர்வாதிகார அரசியல் யாப்பிற்கு' எதிராக இருந்ததுடன், நிறைவேற்று ஜனாதிபதி முறைக்கு முடிவுகட்டுவதாக வாக்குறுதி அளித்தது. ஆனால், 1994 இல் அவரது பொதுஜன முன்னணி தேர்தலில் வெற்றியீட்டியதும், தனது வாக்குறுதிகளை காற்றில் பறக்கவிட்டார். 2001 ஆம் ஆண்டு தேர்தலில் பொதுஜன முன்னணி தோல்விகண்டபோதும், குமாரதுங்க ஜனாதிபதி பதவியைத் தொடர்ந்தார். இப்போது அவர் தேர்தலில் தெரிவுசெய்யப்பட்ட அரசாங்கத்தைக் கவிழ்ப்பதற்காக அந்த பதவியைப் பயன்படுத்திக் கொள்கின்றார்.

அரசைக் கட்டுப்படுத்துவதற்கான மையமாக விளங்குவது, நாட்டின் 20 வருடகால அழிவுகரமான உள்நாட்டு யுத்தத்துக்கு முடிவுகட்டும் ஐ.தே.முன்னணி அரசாங்கத்தின் முயற்சி பற்றி, ஆளும் கும்பல்களுக்கு இடையில் ஏற்பட்டுள்ள முரண்பாடுகளேயாகும். பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, இலங்கைத் தீவை வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்காக ஒரு மலிவு உழைப்பு மேடையாக திறந்துவிடுவதன் பேரில்- தமிழீழ விடுதலைப் புலிகளுடன் ஒரு அதிகாரப் பகிர்வு தயாரிப்புப் பற்றி பேச்சுவார்த்தை நடத்தவிருந்தார். பெரும் வர்த்தகர்களைப் போலவே - அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் இந்தியாவும் தனது சொந்த பொருளாதார மற்றும் மூலோபாய காரணங்களுக்காக, விக்கிரமசிங்கவின் ஆரம்ப நடவடிக்கைகளுக்கு ஆதரவு வழங்கிவருகின்றன. யுத்தத்தின் மூலம் இலாபம் பெற்ற வியபாரிகளில் மிகவும் பின்தங்கிய பகுதியினர், அதேபோல் இராணுவ மற்றும் அரச அதிகாரத்துவ பகுதியினரின் நலன்களைப் பிரதிநிதித்துவம் செய்யும் குமாரதுங்கவும், பொதுஜன முன்னணியும் 'சமாதான முன்னெடுப்புக்களை' எதிர்த்ததோடு, ஜே.வி.பி, சிஹல உறுமய போன்ற சிங்களப் பேரினவாதக் கட்சிகளோடு அதிகளவில் இயைந்துபோகின்றன.

குமாரதுங்கவின் அரசியலமைப்பு சதியானது, இடைநிறுத்தப்பட்ட சமாதானப் பேச்சுவார்த்தைகளை மீண்டும் ஆரம்பிப்பதன் பேரில் வடக்கு - கிழக்கில் ஒரு இடைக்கால தன்னாட்சி அதிகாரசபைக்கான தமது திட்டவரைபை விடுதலைப் புலிகள் வெளியிட்டு, மூன்று நாட்களின் பின்னர் இடம்பெற்றுள்ளது. கடந்த வாரங்களாக- பொதுஜன முன்னணியும் மக்கள் விடுதலை முன்னணியும் மற்றும் சிஹல உறுமயவுடன் சேர்ந்து இடைக்கால நிர்வாகசபைத் திட்டங்களை ஒரு 'காட்டிக்கொடுப்பு' எனவும் அது நாட்டைப் பிளவுபடுத்தும் எனவும் கண்டனம் செய்தனர் என அந்தக் கண்டன அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.






யாழ்.பல்கலைக்கழக அரசறிவியல் ஒன்றியத்தின் ஆதரவுடன் நடத்தப்பட்ட 'கல்வியியலாளன்' நூல் வெளியீட்டு விழாவில் உரைகள் வழங்குவதற்காக கலந்து கொண்டோரை முதல்படத்திலும், வெளியிடப்பட்ட நூலின் முதற் பிரதியை யாழ்.கல்வியியல் கல்லூரியின் பீடாதிபதி தி.கமலநாதன் வழங்க, யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலையின் உபஅதிபர் சு.தியாகலிங்கம் பெற்றுக்கொள்வதை அடுத்த படத்திலும், நிகழ்வில் கலந்து கொண்டோரில் ஒருபகுதியினரை மூன்றாவது படத்திலும் காணலாம்.

## ஆரம்பக் கல்வி அபிவிருத்தி திட்டம்; தகவல்கள் திரட்டப்பட்டு வருகின்றன!

தீவக வலய கல்விப் பணிமனைக்குட்பட்ட பாடசாலைகளின் ஆரம்பக் கல்விஅபிவிருத்தித்திட்டம் தொடர்பான தகவல்கள், வலயக் கல்விப் பணிமனையால் சேகரிக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

ஆரம்ப பிரிவு வகுப்புக்களில் (தரம் 1 தொடக்கம் 5 வரையான) 1999 ஆம் ஆண்டு முதல் 2003 ஆம் ஆண்டுவரை கல்வி பயின்ற மாணவர்களின் மொத்தத் தொகை, இதே காலப்பகுதியில் வகுப்பேற்றப்பட்டோர் விபரம், பாடசாலையை விட்டு இடைவிலகியோர் விபரம் மற்றும் அதேநேரத்தில் மீளக் கற்போர் விபரம் போன்றவை கல்விப் பணிமனையால் சேகரிக்கப்பட்டு வருகின்றன.

இத்தகவல்களை உரிய படிவத்தில் பூர்த்திசெய்து, பிரதிக் கல்விப் பணிப்பாளர் (திட்டமிடல்), தீவக கல்வி வலயம், வேலணை என்ற முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு பாடசாலை அதிபர்கள் கோரப்பட்டுள்ளனர்.

மேலும், தற்போது சேகரிக்கப்படும் தகவல்கள் அடுத்த கல்வியாண்டு ஆரம்பக்கல்வி அபிவிருத்தித் திட்டத்துக்காகவே சேகரிக்கப்பட்டு வருகின்றமையும் இங்கு சுட்டிக்காட்டத்தகக்து. (83)

## பழைய மாணவர் சங்க பொதுக்கூட்டம்

யாழ்.அராலி இந்துக்கல்லூரியின் பழையமாணவர் சங்க விஷேட பொதுக்கூட்டம் இன்று பி.ப 4.30 மணிக்கு பாடசாலை அதிபர் எஸ்.மோகனநாதன் தலைமையில் கல்லூரியின் பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இதில் அனைத்து பழைய மாணவர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு, பழைய மாணவர் சங்கச் செயலாளர் இ.அம்பிகைபாகன் கேட்டுக்கொள்கின்றார்.

## சின்னஞ்சிறு செய்திகள்

### மானிப்பாயில் வீதி விளக்குகள் பழுது

(மானிப்பாய்)

மானிப்பாய் சென். ஆன்ஸ் பாடசாலைக்கு அண்மையில் மற்றும் கூழாவடி புக்கைதின்னிப் பிள்ளையார் கோவிலுக்கு முன்பாகவும் உள்ள வீதி விளக்குகள் பல காலமாகப் பழுதடைந்துள்ளன.

இதுசம்பந்தமாகப் பலதடவை மின்சார சபைக்கு அறிவித்தும், எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லையென, அவ்வூர் மக்கள் கவலை தெரிவித்துள்ளனர். மழைகாலத்தில் தெருவிளக்குகள் இல்லாது மக்கள் பெரும் இன்னலுக்கு உள்ளாகின்றனர் என்று கூறப்படுகின்றது. (39)

### அதிபர், ஆசிரியர்களுக்கான விசேட செயலமர்வு

(வேலணை)

தீவக வலயத்துக்குட்பட்ட பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்களுக்கான இருநாள் விசேட செயலமர்வு நாளையும், நாளைமறுதினமும் காலை 8.30மணி முதல் மாலை 4.30 மணிவரை வேலணை சரஸ்வதி வித்தியாலயத்தில் அமைந்துள்ள ஆசிரியர் நிலையத்தில் இடம்பெறவுள்ளது.

அத்துடன் திங்கட்கிழமை நடைபெறவிருந்த, பாடசாலைக் கணக்குப் பதிவேடு நபருக்கான ஆசியர் நிலைய தொடருறு செயலமர்வு அன்று நடைபெறமாட்டாது என்றும், நடைபெறும் தினம் பின்னர் அறிவிக்கப்படும் என்றும் ஆசிரிய முகாமையாளர் தெரிவித்துள்ளார். (83)

### இழுது மீன்களின் பெருக்கம் எழுவை தீவுக் கடலில் அதிகரிப்பு

எழுவைதீவு கடற்பகுதியில் - இழுதுமீன்களின் பெருக்கம் அதிகமாகக் காணப்படுவதால், கடற்தொழிலாளர்கள் பெரும் பாதிப்புக்குள்ளாவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இம்மீன்களின் பெருக்கத்தால், தொழிலாளர்கள் வலைவீசும்போதும், வலை இழுக்கும்போதும், உடல் உபாதைக்கு உள்ளாகின்றனர். மேலும், இம்மீன் மனித உடலின் எப்பகுதியில் பட்டாலும் உடல் முழுவதும் கடி ஏற்படுவதாக தொழிலாளர்கள் தெரிவிக்கினறனர்.

அத்துடன், பருவமழை ஆரம்பிக்கின்ற காலங்களிலே இம்மீனினம் பெருக்கம் அடையும் என்றும், கடந்த வருடங்களைக் காட்டிலும் இவ்வருடம் இழுது மீன்களின் பெருக்கம் கூடுதலாக உள்ளதாகவும் தொழிலாளர்கள் தெரிவித்துள்ளனர். (83)

நிறைஞ்சனாஸ் சங்கானை
விஜய், பூமிகா நடித்த பத்ரி
காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே.)
வெள்ளி. சனி. ஞாயிறு இரவு 8.45 (பு.நே.)
XXX
(சி-1752)

ராஜா யாழ்ப்பாணம்.
பிதாமகன்
காட்சிநேரம் :
10.30, 2.30, 6.30 (பு.நே)
ஆசனங்களை முற்பதிவு செய்துகொள்ளலாம்.
(சி-1751)

மானிப்பாய் பரிஷ் லயன்ஸ் கழக
செயற்திட்ட நிதிக்காக
மாபெரும் நாட்டிய நாடக விழா
திருமதி கிருஷாந்தி ரவீந்திராவின் நெறியாள்கையில்
லலிதாஞ்சலி
நடன நிகழ்வு
இயக்குனர் மாமணி அ.நற்குணசேகரனின் நெறியாள்கையில்
மாப்பிள்ளை தேவை
முழு நீள நகைச்சுவை நாடகம்
இடம் :- மானிப்பாய் பட்டண சபை மண்டபம
காலம் :- 09.11.2003 ஞாயிறு பி.ப 5 மணி
பிரவேசம் :- 10/=, 20/=, 50/=
நுழைவுச் சீட்டுக்களை மண்டப வாயிலிலும் பெறலாம்.
விளம்பர அனுசரணை:- தணிஸ் ரெக்ஸ்ரைல்ஸ் மூத்தநயினார் கோவிலடி, ஆனைக்கோட்டை.
(சி-1789)

# புலிகளின் இடைக்கால திட்டவரைபில் சிக்கலை எதிர்கொள்ளும் இந்தியா!

## ரைம்ஸ் ஒவ் இந்தியாவில் டிக்ஸிற் கருத்து

தமிழீழ விடுதலைப் புலிகளின் இடைக்கால தன்னாட்சி நிர்வாக வரைபுத்திட்டம் மற்றும் சிறிலங்காவின் தற்போதைய அரசியல் நிலைமைகள் பற்றி, இலங்கைக்கான முன்னாள் தூதுவர் ஜே.என்.டிக்ஸிற் ரைம்ஸ் ஒவ் இந்தியா பத்திரிகைக்கு கருத்து வெளியிட்டுள்ளார்.

ஐந்து வகையான முக்கிய அவதானங்களை அவர் தனது கருத்தில் முன்வைத்திருக்கின்றார்.

அவற்றின் தொகுப்பு பின்வருமாறு- முதலாவதாக, தமிழீழ விடுதலைப் புலிகளின் இடைக்கால தன்னாட்சி நிர்வாக வரைபுத் திட்டத்தில் - இடைக்கால நிர்வாகத்திற்கும், மத்திய அரசாங்கத்திற்கும் முரண்பாடு எழுந்தால், அந்த முரண்பாட்டை நோர்வேயின் அனுசரணையுடன் தீர்க்கமுடியாமல் போனால், அந்தப் பிரச்சினை சர்வதேச நீதிமன்றத்திற்கு எடுத்துச் செல்லப்படவேண்டும்.

இந்த வகையில், இடைக்கால நிர்வாகத்திற்கும், மத்திய அரசிற்கும் இடையில் தோன்றும் முரண்பாடுகள் - சிறிலங்காவின் யாப்பின் அடிப்படையிலோ, நீதி அமைப்புகளின் அடிப்படையிலோ தீர்க்கமுடியாது எனக் கூறப்பட்டுள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகளின் பரிந்துரையின் விளைவுகள் என்பது, ஒரு தனித்த இறையாண்மையுள்ள, எல்லை வரையறுக்கப்பட்ட ஒரு பிரதேசத்திற்கான முதற்படிகள் என்பது தெளிவாகின்றது.

இந்த வகையில், விடுதலைப் புலிகளின் 'இடைக்கால தன்னாட்சி நிர்வாக வரைபுத்திட்டமானது' - நாட்டின் மூன்றில் இரண்டு நிலப்பிரதேசத்தையும், ஐந்தில் நான்கு மடங்கு கடற் பிரதேசத்தையும் கட்டுப்படுத்துவதாக அமையுமெனவும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

இரண்டாவது - மறுபுறத்தில் ரணில் விக்கிரமசிங்க அரசின் பரிந்துரைகளானது, வடக்கு-கிழக்குப் பிரதேசத்தில் ஒரு நிர்வாகத்தை அமைப்பது, அந்த நிர்வாகத்தில் அரசு பிரதிநிதிகள், தமிழீழ விடுதலைப் புலிகள், சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ், எதிர்க்கட்சியான சிறிலங்கா சுதந்திரக் கட்சி போன்றவற்றின் பிரதிநிதிகளைக் கொண்டிருக்கும். இந்த வரையறுக்கப்பட்ட அமைப்பில், தமிழீழ விடுதலைப் புலிகள் பெரும்பான்மையாக இருப்பர்.

சிறிலங்கா 'யாப்பின் வரையறைக்குள் அந்தப் பிரதேசத்தின் நடவடிக்கைகள் அனைத்தையும் விடுதலைப் புலிகள் மேற்கொள்வார்கள். மத்திய அரசானது - நிலம், சட்ட ஒழுங்கு, பாதுகாப்பு, நில நிர்வாகம், நிதி அதிகாரம் போன்றவற்றை முழுமையாகக் கொண்டிருக்கும்.

இந்த வகையில், ரணில் விக்கிரமசிங்கவின் ஐக்கிய தேசியக் கட்சி- தமிழீழ விடுதலைப் புலிகளின் பரிந்துரைகள் குறித்துக் கூறும்போது, அவர்களின் கோரிக்கைகள் நியாயமான பிராந்திய சுயாட்சி, சுய அதிகாரம் போன்றவற்றிலிருந்து வெகுதூரம் விலகிச்சென்றிருப்பதாகக் குறிப்பிட்டுள்ளனர். மூன்றாவதாக - 2002 ஆம் ஆண்டு பெப்ரவரியிலிருந்து நடைமுறையிலுள்ள போர் நிறுத்தத்தைப் பயன்படுத்தி, தமிழீழ விடுதலைப் புலிகள் தமது அரசியல் மற்றும் ஆயுதபலத்தைப் பலப்படுத்திக்கொண்டுவருகின்றனர்.

அத்துடன், யாழ்ப்பாணத்திலும், திருகோணமலையிலும் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடங்களில், தமிழீழ விடுதலைப் புலிகள் நிலைகொண்டுள்ளனர்.

ஜனாதிபதி ஒவ்வொருமுறையும் இந்தியாவிற்கு விஜயம் செய்யும்போது, இந்தப் பிரச்சினைகளை, இந்திய அரசிடம் எடுத்துக்கூறி வந்திருக்கின்றார்.

இதன் விளைவாகவே, கடந்த ஒக்ரோபர் மாதம், பிரதமர் ரணில் விக்கிரமசிங்க - இந்திய அரச தலைவர்களைச் சந்தித்தபோது, இடைக்காலத் தீர்வு தொடர்பான பிரச்சினை- இனப்பிரச்சினைக்கான இறுதித் தீர்வுடன் பிணைக்கப்பட்டிருக்க வேண்டுமென இந்தியா அறிவுறுத்தியுள்ளது.

அத்துடன், இடைக்கால நிர்வாகம் என்பது சிறிலங்காவின் இறையாண்மையையும், ஒருமைப்பாட்டையும் தன்னகத்தே கொண்டதாக அமைய வேண்டுமெனவும், இந்தியா எடுத்துக் கூறியுள்ளது.

இந்தச் சம்பவங்களின் அடிப்படையில்தான், விடுதலைப் புலிகளின் பரிந்துரைகளை முற்றாக நிராகரித்திருக்கும் ஜனாதிபதி, ஒரு அதிரடியான நடவடிக்கையை மேற் கொண்டுள்ளார்.

இதன்மூலம், பேச்சுவார்த்தைக்கு இடையிலான கருத்து முரண்பாடுகளை அவர் மிகவும் ஆழப்படுத்தியிருப்பதுடன், மீண்டும் உள்நாட்டுப் போருக்கான வாய்ப்பையும், ஆளும் மற்றும் எதிர்க்கட்சிக்கும் இடையிலான வன்முறையைத் தோற்றுவிக்கவும் அவர் முனைந்திருக்கின்றார்.

நான்காவதாக - மேற்கத்தைய ஜனநாயக அரசுகள் - தமிழீழ விடுதலைப் புலிகளின் பரிந்துரைகள் கவனத்தில் எடுத்துக் கொள்ளப்பட வேண்டும். பேச்சுவார்த்தையின் மூலம் அது திருத்தி அமைக்கப்பட வேண்டுமெனக் கோரியுள்ளன.



இந்த நாடுகளுக்கு இந்தியாவைப் போன்று, சிறிலங்காவின் இறையாண்மையிலோ, பிரதேச ஒற்றுமையிலோ ஈடுபாடு இல்லை.

இறுதியாக, இந்தியா இந்தப் பிரச்சினையைக் கையாள்வதில் மிகுந்த சிக்கலையும், முரண்பட்ட போக்குகளையும் எதிர்கொள்வதாக இருக்கின்றது.

ஆனால், ஒன்றில் இந்தியா உறுதியாக இருக்கின்றது. அதாவது, 1983 ஆம் ஆண்டிலிருந்து 1988 ஆம் ஆண்டுவரை, இலங்கையில் - இந்தியத் தலையீட்டினால் ஏற்பட்ட நிலைமையை மீண்டும் தோற்றுவிக்க இந்தியா விரும்பவில்லை எனவும் டிக்ஸிற் தெரிவித்துள்ளார்.



விடுதலைப் புலிகளால் அரசுக்கு சமர்ப்பிக்கப்பட்ட திட்ட வரைபுக்கு எதிர்ப்புத் தெரிவித்து - நேற்று முன்தினம் கொழும்பில் "தேச அபிமானிகள்" என்ற அமைப்பு நடத்திய பேரணியின்போது கலந்துகொண்டோரைப் படத்தில் காணலாம்.

# நோர்வே-மு.காங்கிரஸ் சந்திப்பு; நாளை மறுதினம் நடைபெறும்

நோர்வேயின் பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார் ஹெல்கிசன், விசேட சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம், நோர்வேயின் இலங்கைக்கான தூதுவர் கான்ஸ் பிறஸ்கர் ஆகியோருக்கும் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் தலைமையிலான குழுவினருக்கும் இடையே எதிர்வரும் செவ்வாய்க்கிழமை பேச்சுவார்த்தை நடைபெறவுள்ளது.

முஸ்லிம் காங்கிரஸ் தலைமையகத்தில் இப்பேச்சுவார்த்தை நடைபெறுமென, முஸ்லிம் காங்கிரஸ் தெரிவிக்கின்றது.

இந்தப் பேச்சுவார்த்தையின்போது, சமாதானப் பேச்சுவார்த்தைகளில் முஸ்லிம்கள் தனித்தரப்பாகப் பங்குபற்ற வேண்டுமென்பது குறித்தும், வடக்கு-கிழக்கு இடைக்கால சபைக்கான முஸ்லிம்களின் மாற்று யோசனைகள் முன்வைக்கப்படவுள்ளது குறித்தும், விரிவாக நோர்வே பிரதிநிதிகளிடம் எடுத்துக் கூறப்படவுள்ளது.

இப்பேச்சுவார்த்தையில் கலந்துகொள்ளுமாறு வடக்கு-கிழக்கு மாகாண முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒன்றியத்துக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாக சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மேலும் தெரிவிக்கின்றது.

# ஜனாதிபதிக்கு ஆதரவாக நேற்று முன்தினம் பேரணி

ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்துக்கு எதிராக நடவடிக்கைகளை மேற்கொண்டு வரும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கு ஆதரவு தெரிவித்து, ஜே.வி.பியினர் கொழும்பில் நேற்று முன்தினம் பேரணியொன்றை நடத்தினர்.

நேற்று முன்தினம் மாலை நடைபெற்ற இந்தப் பேரணியில், ஜே.வி.பி. ஆதரவாளர்கள் மற்றும் சுதந்திரக் கட்சி ஆதரவாளர்களெனச் சுமார் முப்பதாயிரம் முதல் - நாற்பதாயிரம் பேர்வரை, பங்குபற்றியதாகத் தெரியவருகிறது. இந்தப் பேரணிக்குப் பௌத்த பிக்குகள் தலைமைதாங்கிச் சென்றனர்.

ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆதரவுப் பேரணிகள் ஒன்றையொன்று சந்தித்துக் கொள்ளாதபோதும், இரண்டும் மிக அமைதியாக நடந்து முடிந்தாகப் பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

'ரணில் வெளியேறு' என்று எழுதப்பட்ட பதாதைகளைத் தாங்கிய, தேசிய எதிர்ப்பு முன்னணியைச் சேர்ந்த ஆதரவாளர்கள், இந்தப் பேரணியில் கலந்துகொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# இலங்கை அரசின் சமாதான முயற்சி எந்தவிதத்திலும் பாதிக்கக்கூடாது

## இந்திய வெளியுறவு அமைச்சின் அதிகாரி சர்மா - பி.பி.சிக்குப் பேட்டி

(கொழும்பு)

இலங்கையின் இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்காக மேற்கொள்ளப்பட்டுவரும் நடவடிக்கைகள் - எந்த வகையிலும் பாதிக்கப்படாமல் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட வேண்டுமென, இந்திய வெளியுறவு அமைச்சின் அதிகாரி சர்மா - பி.பி.ஸிக்கு அளித்த பேட்டியில் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது, இலங்கையில் நிகழும் தற்போதைய அரசியல் நெருக்கடியினால், இந்தியா கவலை கொண்டிருக்கிறது. அயல்நாடு என்பதால், இது இயற்கையானதுதான் என்ற அர்த்தத்தில் நாங்கள் இலங்கையில் நெருக்கடி ஏற்படுவதையோ, சமாதான நடவடிக்கைகள் தடைப்படுவதையோ தவிர்ப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென்று வலியுறுத்துவோம்.

பிரதமர் வாஜ்பாயும், ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவும் கடந்த வியாழக்கிழமை இருபது நிமிடம் தொலைபேசியில் உரையாடினார்கள். அப்போது சந்திரிகா சமாதான நடவடிக்கைக்கு தாம் ஆதரவு தெரிவிப்பதாகவும் கூறினார்.

இலங்கையின் நிலைமை குறித்து- இந்தியா கவலையடைந்திருப்பதாகப் பிரதமர் வாஜ்பாய் - ஜனாதிபதியிடம் எடுத்துரைத்தார். அரசியல் சட்டநெருக்கடி உருவாகாமல் தடுக்கப்படவேண்டு மென்றும் பிரதமர் வாஜ்பாய் வலியுறுத்தினார்.

சமாதான நடவடிக்கைகள் பாதிக்கப்படக்கூடாதென்றும், தற்போதைய பிரச்சினைகளுடன் சம்பந்தப்பட்டவர்களுக்கு, அவர்களுக்குள் அரசியல்ரீதியான பேச்சுவார்த்தை நடத்தி, ஏற்கத்தக்க தீர்வுகள் காணப்படவேண்டும் என்றும் வாஜ்பாய் தெரிவித்தார்.

இந்தத் திடீர் அரசியல் நிகழ்வுகள் பற்றி நாங்கள் - எங்களின் ஆச்சரியத்தை ஏற்கனவே வெளிப்படுத்தியிருக்கிறோம். எனினும், சமாதான நடவடிக்கைகள் எந்த வகையிலும் பாதிக்கப்படுவதாகவோ, ஆபத்துக்கு உள்ளாக்கப்படுவதாகவோ இருக்காது என்று நம்பிக்கை தெரிவிக்கிறோம் எனத் தெரிவித்தார்.

# இலங்கையரசை-ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணைக்குழு கண்டிப்பு

விடுதலைப் புலிகளுடன் போர் நடைபெற்ற காலத்தில் - படையினரும், பொலிஸாரும் மேற்கொண்ட ஆட்கடத்தல், அத்துமீறல் மற்றும் சித்திரவதை போன்ற குற்றங்களுக்காக, அவர்கள் அரசினால் தண்டிக்கப்படவில்லை என ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை ஆணைக்குழு சுட்டிக்காட்டியுள்ளது.

18 உறுப்பினர்களைக் கொண்ட மனித உரிமைகள் ஆணைக்குழு வெளியிட்டுள்ள அறிக்கையில், தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்கள் மீது, கொடூரமான சித்திரவதைகளை படையினரும், பொலிஸாரும் மேற்கொண்டுள்ளதாகக் கூறப்பட்டுள்ளது.

எனினும், அவர்களுக்கு எந்த விதமான தண்டனையும் வழங்கப்படவில்லையெனவும், இது பாரிய மனித உரிமை மீறல் செயலெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு தண்டிக்கப்படாது விடும் செயற்பாடு தொடர்ந்து இடம்பெற்று வருவதாக, ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணைக்குழுவைச் சேர்ந்த நைஜெல் றோட்லி கூறியுள்ளார்.

தற்பொழுது அவசரகாலச் சட்டம் கொண்டு வரப்பட்டதைக் கண்டித்த அவர், முன்னர் அவசர காலச் சட்டம் நடைமுறையில் இருந்தபோது, இடம்பெற்ற வன்முறைகளையும் சுட்டிக்காட்டியிருக்கின்றார்.

# மட்டக்களப்பில் நேற்று நடைபெறவிருந்த தமிழ்-முஸ்லிம் குழுக்கூட்டம் ஒத்திவைப்பு

வவுணதீவு பிரதேச செயலக மண்டபத்தில், நேற்றுக் காலை நடைபெறவிருந்த மட்டக்களப்பு மாவட்ட தமிழ் - முஸ்லிம் விவகாரங்கள் தொடர்பாக ஆராயும் உயர்மட்ட உபகுழுக்கூட்டம் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள நிலைமையினைக் கருத்திற்கொண்டு, உப-குழுக்கூட்டங்களில் பங்குபற்ற முடியாத நிலையேற்பட்டுள்ளதாகத் தமிழீழ விடுதலைப் புலிகள் சார்பில், மட்டக்களப்பு மாவட்ட கண்காணிப்புக்குழு' அலுவலகத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது

இதனையடுத்து உபகுழுக்கூட்டம் ஒத்திவைக்கப்பட்டுள்ளது பற்றி, கண்காணிப்புக்குழுவின் மட்டக்களப்பு மாவட்டத் தலைவர் தமக்கு தெரியப்படுத்தியதாக - முஸ்லிம் மக்கள் சார்பாக உப-குழுக் கூட்டங்களுக்கு தலைமை தாங்கும் வீடமைப்பு பிரதியமைச்சர் பஷீர் சேகுதாவுத் தெரிவித்தார்.

# பூநகரி தவளைப் பாய்ச்சல் சமரின் பத்தாண்டு நிறைவு விழாவுக்கு ஏற்பாடு

(கொழும்பு)

விடுதலைப் புலிகள் தவளைப் பாய்ச்சல் படை நடவடிக்கைமூலம், பூநகரி மண்ணை ஆக்கிரமித்திருந்த படையினரை, அழித்தொழித்த வரலாற்றுச் சமரின் பத்தாண்டு நிறைவு விழாவிற்கான ஏற்பாடுகள் பூநகரியில் நடைபெற்று வருகின்றன.

பூநகரி கடற்புலிகளின் அரசியற் துறையினரது அனுசரணையுடன், பூநகரிப் பிரதேசத்தில் மக்களால் தெரிவுசெய்யப்பட்ட விழா செயற்குழுவினர் - இந்த ஏற்பாடுகளில் தீவிரமாக இறங்கியுள்ளனர்.

பூநகரிப் பிரதேசத்திலுள்ள அரச, அரசசார்பற்ற நிறுவனங்கள், பாடசாலைகள், விளையாட்டுக்கழகங்கள், பொதுமக்கள் போன்றோரின் ஒத்துழைப்புடன் விழாவிற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்த வெற்றிவிழாவை முன்னிட்டு, பூநகரிக் கோட்ட பாடசாலை மாணவர்களுக்கு இடையில், பொது அறிவுப்போட்டி ஒன்றும் நடத்தப்பட்டுள்ளது.

தரம் ஒன்பது தொடக்கம் பதின்மூன்று வரையான வகுப்புகளைச் சேர்ந்த - பதின்நான்கு பாடசாலைகளின் 800 இற்கும் மேற்பட்ட மாணவர்கள் போட்டியில் தோற்றினர்.

உதைபந்தாட்டம், வலைப்பந்தாட்டம், மரதனோட்டம் ஆகிய போட்டிகள் நேற்று நடைபெற்றன. இறுதிப்போட்டிகள் 11 ஆம் திகதி நடைபெறவுள்ளது.



அளவெட்டி அருணோதயா கல்லூரியில் நடைபெற்ற பரிசளிப்பு விழாவின்போது, கல்லூரி அதிபர் பி.மகேந்திரராசா, பிரதம விருந்தினராக கலந்துகொண்ட வலிகாமம் வலய கல்விப் பணிப்பாளர் திருமதி றெஜினா இருதயநாதனை வரவேற்று அழைத்துவரும் காட்சியையும் மற்றும் உப அதிபர், ஆசிரியர்கள், மாணவர்களையும் படத்தில் காணலாம்.

# ஆலய உண்டியல் உடைத்த இரண்டு சிறுவர்கள் கைது!

(யாழ்ப்பாணம்)

பட்டப் பகல்வேளையில் ஆலய உண்டியலை உடைத்து, பணத்தைத் திருடமுயன்ற இரு சிறுவர்கள் - கையும் களவுமாகப் பிடிபட்டனர். இச்சம்பவம் மாரீசன் கூடல் பகுதியிலுள்ள ஆலயமொன்றில் இடம்பெற்றது.

நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில், கைதுசெய்யப்பட்ட இரு சிறுவர்களும் - இளவாலை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டனர். இந்த ஆலய வளவினுள் ஆடுகட்டச் சென்ற ஊர்ப் பொதுமகன் ஒருவர் - ஆலயத்தினுள் சந்தேகத்திற்கிடமான சத்தத்தைக் கேட்டுள்ளார்.

வேறு சிலரையும் அழைத்துக் கொண்டு அவர் ஆலயத்தினுள் சென்று பார்த்தபோது, குறிப்பிட்ட இரு சிறுவர்களும் உண்டியலின் பூட்டை உடைத்து, திருடிய பணத்துடன் புறப்படத் தயாராகியுள்ளனர்.

இருவரையும் கைதுசெய்த ஆலய நிர்வாகசபையினர், இவர்களை இளவாலை பொலிஸில் ஒப்படைத்தனர். பொலிஸார் மேற்கொண்ட விசாரணைகளின்போது, இதற்கு முன்னரும் இருதடவைகள் தாம் இதே ஆலயத்தில் திருட்டில் ஈடுபட்டதாகவும் இவர்கள் ஒப்புக்கொண்டுள்ளனர்.

அத்துடன், முன்னர் தம்மோடு திருட்டில் ஈடுபட்ட வேறு நான்கு சிறுவர்களையும் இவர்கள் இனங்காட்டியுள்ளனர். இவர்கள் அனைவரும் பாடசாலையில் ஒரேவகுப்பில் கல்விபயிலும் மாணவர்களாவர்.

ஆறு பேரையும் எச்சரிக்கை செய்த பொலிஸார், மீண்டும் பெற்றோரிடம் இவர்களை ஒப்படைத்து, கண்டிப்புடன் வளர்க்கும்படி கேட்டுக்கொண்டனர். (71)

## மகாபொல கொடுப்பனவு

(கொழும்பு)

மகாபொல கொடுப்பனவுகள் யாவும், எதிர்வரும் 15 ஆம் திகதி நாடு முழுவதுமுள்ள பல்கலைக்கழகங்களில் வழங்கப்படும் எனப் பல்கலைக்கழக ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

2002, 2003 கல்வியாண்டிற்குரிய பல்கலைக்கழக மாணவர்களுக்கே, இந்த மகாபொல கொடுப்பனவுகள் வழங்கப்படவுள்ளன.

இதுவரை காலமும் அந்தந்த மாவட்டங்களில் வைத்து வழங்கப்பட்டு வந்தமுறை -

இந்த ஆண்டுடன் நீக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (ப)

## யாழ்.திறந்த பல்கலைக்கழகத்திற்கு

# புதிய மூன்று மாடிக்கட்டடம் அமைக்க ஆசிய அபிவிருத்தி வங்கி உதவும்!

(யாழ்ப்பாணம்)

யாழ்.திறந்த பல்கலைக்கழகத்திற்கென மூன்று மாடிக்கட்டடம் ஒன்றினை அமைப்பதற்கு, ஆசிய அபிவிருத்தி வங்கி - 44 மில்லியன் ரூபா நிதியுதவி வழங்கவுள்ளது.

யாழ்.திறந்த பல்கலைக்கழக முதல்வர் எஸ்.ஞானேந்திரா இதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டிருப்பதாகத் தெரியவருகின்றது.

மிகநீண்ட காலமாகவே யாழ்.திறந்த பல்கலைக்கழகம் - பல வசதிக்குறைபாடுகள் உடையதாக இயங்கி வருகின்றது. இந்நிலையில், ஆசிய அபிவிருத்தி வங்கி உதவி வழங்க முன்வந்துள்ளமையையிட்டு, யாழ். திறந்த பல்கலைக்கழகம் மகிழ்ச்சி தெரிவித்துள்ளது.

இந்தக் கட்டடம் அமைப்பதற்கான காணியை - யாழ்.தொழில்நுட்பக் கல்லூரி வழங்கவுள்ளது. இந்தக் காணியை வழங்குவது குறித்து யாழ்.தொழில்நுட்பக் கல்லூரி அதிபர் நா.யோகராஜனிடம் கேட்டபோது -

காணி வசதி இல்லையெனின், யாழ்.திறந்த பல்கலைக்கழகத்திற்குக் கிடைக்கக்கூடிய இந்த நிதியுதவி திரும்பிச் சென்றுவிடும். எனவேதான், எமக்குரிய காணித்துண்டொன்றைத் திறந்த பல்கலைக்கழகத்திற்கு வழங்க உடன்பட்டுளோம் என்றார்.

இந்தக்காணி கையளிப்பு சம்பந்தமான ஆலோசனை நடத்துவதற்காக, இலங்கை தொழில் பயிற்சித் திணைக்களத்தின் கட்டட நிர்மாணப் பணிப்பாளர் தி.சண்முகராசா - நேற்று கொழும்பிலிருந்து யாழ்.வந்துள்ளார்.

இந்தக் கட்டடம் அமைக்கும் பணிகள் - எதிர்வரும் டிசம்பர் மாதம் முதல் ஆரம்பிக்கப்படும் எனவும் யாழ்.திறந்த பல்லைக்கழக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (ப)

# புறநிலைப் படிப்புக்கள் அலகில் தொழிற்சங்கவியல் கற்கைநெறி

யாழ்.பல்கலைக்கழக புறநிலைப் படிப்புக்கள் அலகின் ஏற்பாட்டிலான தொழிற்சங்கவியல் கற்கைநெறி, 22 ஆம் திகதி காலை 9 மணிக்கு ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது.

இந்தக் கற்கைநெறி சனி, ஞாயிறு தினங்களில் காலை 9 மணிமுதல் நண்பகல் 12 மணிவரையும் நடைபெறும் எனப் புறநிலைப் படிப்புக்கள் அலகின் இணைப்பாளர் பேராசிரியர் இரா.சிவச்சந்திரன் அறிவித்துள்ளார்.

கற்கைநெறிக்கான விரிவுரைகளை - தொழிற்சங்கவியல் மற்றும் மனித உரிமை போன்றவற்றில் ஆற்றல் வாய்ந்தவர்கள் வழங்கவுள்ளனர்.

இதில் பல்கலைக்கழக இளம் விரிவுரையாளர்கள் மற்றும் பணியாளர்கள் கலந்துகொள்ளலாம். தொழில் விருத்தியில் ஆர்வமுள்ளவர்களும் கலந்துகொள்ளலாம்.

## குடிநீர் விநியோகம் நிறுத்தம்

(பருத்தித்துறை)

பருத்தித்துறை நகரசபையால்-பருத்தித்துறை முனையிலிருந்து இன்பருட்டிவரை மேற்கொள்ளப்பட்டு வந்த குடிநீர் விநியோகம்- கடந்த ஒருவாரகாலமாக நிறுத்தப்பட்டுள்ளது. இதனால், இப்பகுதி மக்கள் குடிதண்ணீரைப் பெற முடியாமல் பெரும் பாதிப்புக்குள்ளாகியுள்ளனர்.

இவ்விடயம் தொடர்பாக நகரசபை எந்தவொரு நடவடிக்கையினையும் எடுக்காது, மௌனமாய் இருப்பது குறித்தும் மக்கள் கவலைவெளியிட்டுள்ளனர். இதேவேளை, முனைப் பகுதியிலுள்ள பாலம் உடைந்துள்ளதால், கரையோர போக்குவரத்திலும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. (9)

# கூட்டமைப்பினர் மீதான தாக்குதல்; வழக்கு விசாரணை ஒத்திவைப்பு

(யாழ்ப்பாணம்)

கடந்த பொதுத்தேர்தலின்போது, நாரந்தனையில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் தொடர்பான வழக்கு விசாரணை, எதிர்வரும் 13 ஆம் திகதிவரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பான வழக்கு விசாரணை யாழ்.நீதிமன்றில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்ட ஈ.பி.டி.பி நாடாளுமன்ற உறுப்பினர் மதனராஜா, நெப்போலியன், முன்னாள் தீவக பிரதேசசபைத் தலைவர் கருணாகரமூர்த்தி, ஜீவன் ஆகிய நான்குபேரும் - தமது பக்க சாட்சியினைப் பதிவுசெய்யுமாறு கோரிக்கை விடுக்கப்பட்டது.

இதனை ஏற்றுக்கொண்ட நீதிவான் - இம்மாதம் 13 ஆம் திகதிக்கு வழக்கை ஒத்திவைத்தார்.

மேற்படி சம்பவம் தொடர்பான விசாரணையின்போது, அரச சட்டத்தரணி சுகந்தி கந்தசாமி - பாதிக்கப்பட்டவர்கள் சார்பாக 22 வழக்குகளைத் தாக்கல் செய்து, ஆரம்பகட்ட விசாரணையைப் பூர்த்தி செய்தார். இந்தச் சம்பவத்தின்போது, தாக்குதலுக்குட்படுத்தப்பட்டு, பாதிக்கப்பட்டவர்களின் மருத்துவ சான்றிதழையும் மன்றில் சமர்ப்பித்தார்.(ச)

# இராணுவ வாகனம் மோதி 3 பொதுமக்கள் படுகாயம்!

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் வெவ்வேறு இடங்களில் இராணுவ வாகனம் மோதி, மூவர் படுகாயமடைந்தனர்.

கடந்த புதன்கிழமை மாலை 6.30 மணிக்குப் பருத்தித்துறை - வியாபாரிமூலை பகுதியில் மோட்டார் சைக்கிளில் வந்த ஒருவர் மீது, இராணுவ வாகனம் மோதியதில், அவர் படுகாயமடைந்தார். கதிரப்பள்ளை வீதி தம்பசிட்டியைச் சேர்ந்த மகாலிங்கம் மனோகரன் (வயது 24) என்பவரே இவ்வாறு காயமடைந்தவராவார்.

நேற்றுமுன்தினம், கொடிகாமம் பகுதியில் இராணுவ வாகனம் - பொதுமக்கள் வந்த லொறியொன்றுடன் மோதி விபத்துக்குள்ளானதில், லொறியில் பயணம் செய்த இரு பொதுமக்கள் படுகாயமடைந்தனர். கணபதிராஜன், கணேஸ் ராஜ்குமார் ஆகிய இருவருமே படுகாயமடைந்த நிலையில், பருத்தித்துறை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

## காஸ்குக்கர் தீப்பற்றியதில் குடும்பஸ்தர் எரிகாயம்

காஸ்குக்கர் தீப்பற்றிக் கொண்டதில் குடும்பஸ்தர் ஒருவர் எரிகாயங்களுக்குள்ளான நிலையில், யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவத்தில் இளவாலை பெரிய கோயிலடியைச் சேர்ந்த குமாரவேலு செல்வரத்தினம் (வயது 52) என்பவரே எரிகாயங்களுக்குள்ளானவராவார். (ப)

## தொழில் முயற்சி தொடர்பான பயிற்சி வகுப்பு

(யாழ்ப்பாணம்)

சிறுவர் கல்விக்கும் பால்நிலை அபிவிருத்திக்குமான நிறுவனத்தினால், "வியாபாரத்தை ஆரம்பித்து முன்னேற்றுவது'' தொடர்பான பயிற்சி வகுப்புகள் - இம்மாதம் 21 ஆம் திகதி தொடக்கம் 25 ஆம் திகதிவரை நடாத்தப்படவுள்ளன.

இப்பயிற்சி முடிவில், இந்த விடயம் சார்ந்த விடயங்களை அறிவதுடன், ஒவ்வொருவரும் தாங்கள் விரும்பும் வியாபாரத்தை ஆரம்பிப்பதற்கான பணத்தினை வங்கியிலிருந்து பெறுவதற்கு வேண்டிய திட்ட அறிக்கைகளும் தயாரிக்கப்படும்.

இந்த நிறுவனத்தினால், பயிற்சியாளர்கள் தெரிவு தற்பொழுது இடம்பெறுகின்றன. இதில் பங்குபற்றிப் பயனடைய விரும்பும் முயற்சியாளர்கள் - மூளாயிலுள்ள நிறுவன காரியாலயத்தில் பதிவு செய்து கொள்ளுமாறு கேட்கப்படுகின்றனர். (118)


வாழ்க வளமுடன்

இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

மூன்றாவது அகவையில்

பெயர் : சா.சானுகா

முகவரி : அழகபுரி, அல்வாய் வடக்கு



பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்

வாழ்க வளமுடன்



சிறாரின் பெயர்:------------------------------------------

முகவரி :------------------------------------------

பிறந்த ஆண்டு:------------------------------------------

கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

-------------------

பெற்றார் ஒப்பம்

# குனதியான பாரம்பரியம்

ஒரு நூற்றாண்டாக உதைபந்தாட்டத்தில் தனக்கென ஒரு தனியிடத்தைத் தக்கவைத்த பாடசாலை என்றால், அன்று தொடக்கம் இன்றுவரை சென்.பற்றிக்ஸ் கல்லூரிதான். 1850 ஆம் ஆண்டிலிருந்து இன்றுவரை, வடக்கிலே முன்னணியிலிருந்து வருவது குறிப்பிடத்தக்கது. இந்தக் கல்லூரியில் வளர்ந்த வீரர்கள் - தேசிய அணியில் இடம் பெற்றதோடு, உதைபந்தாட்ட அமைப்புக்கள், சங்கங்களில் மிகமுக்கிய பொறுப்புக்களில் உள்ளனர்.

இவற்றிக்கெல்லாம் காரணம் - இந்தக் கல்லூரி நிர்வாகத்தினரும், உதைபந்தாட்டப் பொறுப்பாசிரியர்களும், மாணவர்களினதும் நம்பிக்கையுடன்கூடிய கூட்டுமுயற்சியும் என்றால், அது மிகையாகாது. பாடசாலைகளுக்கிடையேயான போட்டிகள், சிநேகபூர்வ ஆட்டங்கள், சுற்றுப்போட்டிகள் என எல்லா தொடர்களிலும் தமக்கென ஒரு முத்திரையை வைத்துள்ள கல்லூரி என்றால், அது சென்.பற்றிக்ஸ் கல்லூரியாகத்தான் இருக்கும். யாழ்.நகரை அண்மித்துள்ள மிகத் திறமையான உதைபந்தாட்ட விளையாட்டு அணிகளில் விளையாடியவர்கள், விளையாடி வருபவர்களில் பெரும்பாலானோர் இந்தக் கல்லூரியில் வளர்ந்த வீரர்கள் என்பது, நீண்டகால யாழ்ப்பாண உதைபந்தாட்ட ரசிகர்கள் கூறும் கருத்து.

1932 ஆம் ஆண்டிலிருந்து தொடர்ச்சியாக 8 ஆண்டுகள் பாடசாலைகளுக்கு இடையேயான உதைபந்தாட்டப் போட்டிகளில் முதல் இடத்தைப் பெற்றுள்ளது. பாடசாலைகளுக்கு இடையேயான உதைபந்தாட்டப் போட்டிகளில் - 1946 ஆம் ஆண்டுடன் விளையாடுவதை நிறுத்தி, அப்போட்டிகளிலிருந்து விலகி, 2002 ஆம் ஆண்டு வரை, சிநேகபூர்வ போட்டிகளிலேயே பங்குபற்றி வந்துள்ளது. இந்த ஆண்டிலிருந்தே சிநேகபூர்வ ஆட்டங்களிலும், பாடசாலைகளுக்கு இடையேயான போட்டிகளிலும் பங்குபற்றி வருகிறது. இந்தக் கல்லூரியில் 14 வயது, 16 வயது, 18 வயது, 20 வயது உதைபந்தாட்ட அணிகள் உள்ளன. இந்த அணிகள் ஒவ்வொன்றும் தங்களுக்கென ஒரு தனியான பாணியை வகுத்துக்கொண்டு செயற்பட்டு வருகின்றன.

2003 ஆம் ஆண்டிலே கல்லூரிக்கும், வட பிரதேசத்திற்கும் பெருமை சேர்த்த அணியென்றால், அது 20 வயதுப் பிரிவு அணிதான். சமாதானத்திற்கான கிண்ணம் (2003) இச்சுற்றுப்போட்டியில் யாழ்மாவட்ட கல்லூரி அணிகளும், ஏனைய மாவட்ட அணிகளும் பங்குபற்றின. இந்தச் சுற்றுப்போட்டியில் இறுதி ஆட்டத்திற்குத் தெரிவான அணிகளாக மன்னார் சென்.சேவியர் அணியும், சென்.பற்றிக்ஸ் அணியும் - இறுதிப் போட்டியில் பங்குபற்றின.

ஆரம்பத்திலிருந்து மிக விறுவிறுப்பாக இரு அணிகளும் திறமையாக விளையாடியபோதும், குறிப்பிட்ட நேரத்தில் இரு அணிகளும் கோல்களைப் போடாத சந்தர்ப்பத்தில் - தண்டனை உதைகள் வழங்கப்பட்டன. இதில் 1 கோல் வித்தியாசத்தினால் கிண்ணத்தை தவறவிட்டமை, இக்கல்லூரிக்கு ஓர் துரதிர்ஷ்டமான செயலாகும்.

சென்.பற்றிக்ஸ் அணி - யாழ்.மாவட்டப் பாடசாலைகளுக்கு இடையேயான சிநேகபூர்வ ஆட்டங்களில் பங்குபற்றியது. இந்தப் போட்டிகளில்- முன்னணிப் பாடசாலை அணிகள் பல மோதியபோதிலும், 6 போட்டிகளில் பங்குபற்றி, எல்லாப்போட்டிகளிலும் வெற்றிபெற்றது. இப்போட்டிகளில் மொத்தமாக 35 கோல்களைப் போட்டமை - இந்தக் கல்லூரிக்குச் சிறப்பான ஒரு பதிவாகும்.

இந்தக் கல்லூரி உதைபந்தாட்ட அணியானது, அண்மைக்காலத்தில் மிகச்சிறப்பாகச் செயற்பட்டு வருவதற்கு எவை காரணமாக அமையுமெனச் சற்றுள்ளே சென்று பார்த்தால், இந்த வெற்றிகளுக்குக் காரணமானவர்களாக - இக்கல்லூரி முதல்வர் அருட்திரு அகஸ்ரின் B.ஞானப்பிரகாசம் (அதிபர்), S.சகாயராஜா (விளையாட்டுப் பொறுப்பாசிரியர்), ம.பேர்ட்டி பனிஸ்ரர் (உதைபந்தாட்ட அணிப்பொறுப்பாசிரியர்) இவர்களின் தன்னலமற்ற சேவையும், தட்டிக்கொடுக்கும் தன்மையும், கடின பயிற்சியளிப்புமே இக்கல்லூரி 20 வயதுப் பிரிவு அணி வெற்றிப்பாதையில் வீறுநடைபோட வழிகாட்டியாக உள்ளன. இந்த அணியின் தலைவர் V.R.சுசிதனின் கட்டளைகளை ஏற்று, பூரணமாக ஒத்துழைக்கும் ஒவ்வொரு வீரர்களும் மதிக்கத்தக்கவர்கள்.

எல்லோராலும் ஆவலாக எதிர்பார்க்கப்படும் புனிதர்களின் போர் (சென். பற்றிக்ஸ் - சென்.கென்றிஸ்), பொன் அணிகளின் போர் (சென்.பற்றிக்ஸ் - யாழ்ப்பாணக் கல்லூரி). இம்முறை இடம்பெற்ற புனிதர்களின் போர் - உதைபந்தாட்டப் போட்டியில் இரு அணிகளும் மிகத் திறமையாக விளையாடியபோதும், 1:0 என்ற கோல் கணக்கில் சென்.பற்றிக்ஸ் அணி வென்றது. பொன் அணிகளின் போர் - உதைபந்தாட்டப் போட்டியில் 5:0 என்ற கோல் கணக்கில், சென்.பற்றிக்ஸ் கல்லூரி வெற்றியைத் தனதாக்கிக்கொண்டது. இந்தக் கட்டத்தில் சென். பற்றிக்ஸ் கல்லூரி வீரன் P.S.றொசான் - சிறந்த ஆட்டநாயகனாகத் தெரிவுசெய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.






நூற்றாண்டு காலம் வாழ்க

20 வயது அணி மட்டுமல்லாது - 18 வயது, 19 வயது அணிகளும் இந்த வருடம் கிண்ணங்களைத் தமதாக்கிக்கொண்டன. 18 வயது அணி - பாடசாலைகளுக்கு இடையிலான உதைபந்தாட்டப் போட்டிகளில் - கோட்ட, வலய மட்டங்களில் 1 ஆம் இடத்தைப்பெற்று, கிண்ணத்தைச் சுவீகரித்தது. 19 வயது அணி சங்ஸ்தா சுற்றுப்போட்டியில் வெற்றிக் கிண்ணத்தைப் பெற்றுக்கொண்டது.

பாடசாலைகளுக்கு இடையேயான போட்டிகளில் - உதைபந்தாட்டத்தில் தனக்கென ஒரு தனியான இடத்தைப் பிடித்து, பல திறமையான, அதிலும் நேர்மையான வீரர்களை இனம் காட்டியது. இனிவரும் காலங்களிலும் இவ்வாறான பல வீரர்களைத் தேசியரீதியிலும், பிரதேச கழகங்களிலும் ஈடுபடுத்தி, உதைபந்தாட்ட ரசிகர்களுக்குப் பெரு விருந்தை அளிக்கவேண்டும். இந்தக் கல்லூரியின் இந்தச் செயற்பாடுகளுக்குப் பொறுப்பான ஒவ்வொருவரும் முழுமுயற்சியுடன் ஈடுபடுவார்களாயின் - இனிவரும் காலங்களில் பல சிறப்பான உதைபந்தாட்ட வீரர்களை நாம் காணலாம்.

**(காவலூர் விஜேந்திரன்)**

# கிழக்கில் இன்னொரு சூரியன்

**விஸ்வரூபம்**



இம்மாத இறுதியளவில் சீனா - ஆசிய கிரிக்கெட் சம்மேளனத்தில் ஒரு அங்கத்துவ நாடாக விளங்கப்போகின்றது என்பது தெரியவருகின்றது. ஆசிய கிரிக்கெட் சம்மேளனத்தின் உயர் அதிகாரி அஸ்ரபுல் ஹக் கருத்துக் கூறுகையில் - சீனமக்களிடம் காணப்படும் கிரிகெட் ஆர்வமும், உத்தியோகத்தர்களின் Seriousness உம் ஆச்சரியமளிக்கிறது. ஹொங்கொங்கில் என்னைச் சந்தித்த சீன அதிகாரிகள் - ஆசிய அங்கத்துவத்தையும், ICC அங்கத்துவத்தையும் கோரிநிற்கின்றார்கள் என்கிறார். மேலும் சீனமக்கள் குடியரசின் அங்கத்துவமானது - ஆசிய கிரிக்கெட்டின் உயர்ச்சிக்கு வழிவகுக்கும் என்றும் அவர் நம்புகின்றார்.

சீன மக்களும், அதிகாரிகளும் மிக உற்சாகமாகவும், திட்டமிட்ட வகையிலும் கிரிக்கெட் ஆட்டம் தொடர்பான விடயங்களில் ஈடுபட்டுக்கொண்டிருக்கிறார்கள். மேலும், ஒருவரையொருவர் தொடாது விளையாடும் ஒரு விளையாட்டு என்றவகையிலும் சீன மக்கள் கிரிக்கெட் மீது கூடிய ஆர்வம் செலுத்துவது தெரிகிறது. இன்னொன்று உள்ளரங்க, வெளியரங்கப் போட்டிகள், தடகளப் போட்டிகள், ஜிம்னாஸ்ரிக் போட்டிகள், உதைபந்தாட்டம் போன்றவற்றில் சீன நாட்டின் உயர்ந்த தரம் பற்றிக் புதிதாகப்பேச எதுவும் இல்லை. இந்தவகையில் எந்தவொரு விளையாட்டையும் வாலயப்படுத்திக்கொள்ளும் உள, உடல் ஆற்றல் மிக்கவர்கள் சீனமக்கள். அந்தவகையில் நோக்கும் போது, இன்னும் 15 அல்லது 20 வருடங்களில் சர்வதேச சீனக் கிரிக்கெட் அணி களம் புகுந்துவிடும் என்பதில் சந்தேகம் இல்லை.

ஆசியக் கிரிக்கெட் சம்மேளனத்தில் தற்போது டெஸ்ட் விளையாடும் - பாகிஸ்தான், இந்தியா, இலங்கை, பங்களாதேஷ் உட்பட இருபது நாடுகள் அங்கம் வகிக்கின்றன. உலகிலேயே அதிகூடிய மக்கள் தொகைகொண்ட சனா - இருபத்தோராவது நாடாக ஆசிய கிரிக்கெட் சம்மேளனத்தில் இணையும்போது, அது உண்மையிலேயே பெருமை மிகு நிகழ்வாகவே இருக்கும்.

**- சரண்யன்.**

# மூவேந்தர்கள்

உலகின் அதிசிறந்த துடுப்பாட்ட வீரன் யார் என்பது அண்மைக்காலத்தில் பெரிதாகப் பேசப்படவில்லை. இருந்தும், சில காலத்திற்கு முன் மேற்கிந்தியத் தீவுகள் அணியின் தலைவர் பிறைன் லாறாவா அல்லது இந்திய வீரர் சசசின் டெண்டுல்கரா என்று சர்ச்சை ஏற்பட்டுள்ளது. இதில் உண்மையாகவே இரண்டு வீரர்களும் தங்களுக்குள் சர்ச்சைக்குள்ளாகிக் கொள்ளாமல், பரஸ்பரம் ஒருவரையொருவர் சிறந்தவர் என்று அங்கீகரித்துக் கொண்டு அமைதியாகி விட்டனர். ஆனால், இரண்டு பேருமே எதுவித குறையும் இல்லாத முதல்தர சர்வதேசக் கிரிக்கெட் வீரர்கள் தான்.

இப்போது இன்னொரு திசையில் இருந்து, இன்னொரு வகையில் புதிய சர்ச்சையொன்று எழுந்துள்ளது. அதுவும் அவுஸ்திரேலிய அணிக்கும் சிம்பாப்வே அணிக்கும் இடையிலான டெஸ்ட் போட்டியில், உலகசாதனை ஓட்டங்களான 380 ஓட்டங்கள்வரை மத்தியூ ஹேடன் பெற்றதும், இப்போது விடயம் புதிய கோணத்தில் வருகிறது.



முதல்வன் நீயா

இந்தவாரத்தில் ஒரு நிறுவனத்தின் தரக் கணிப்பின்படி - மத்தியூ ஹேடன் முதலாம் இடத்தினைப் பெற்றுக்கொண்டுள்ளார். ஆனால், இலங்கையில் சுழற்பந்து வீச்சாளர் முத்தையா முரளிதரன் கருத்துக் கூறும்போது, உலகின் அதிசிறந்த துடுப்பாட்ட வீரன் பிறைன் லாறாதான் என்று கூறியுள்ளார். 459 டெஸ்ட் விக்கெட்டுகளைக் கைப்பற்றியுள்ள முரளி, மேலும் கருத்துத் தெரிவிக்கையில்- எனது டெஸ்ட் வரலாற்றில் நான் எதிர்கொண்ட மிகவும் ஆபத்தான இடதுகைத் துடுப்பாட்ட வீரர் என்றால் - அது லாறாதான் என்றும், தன் அனுபவத்தையே சான்றாகவும் எடுத்துக் காட்டியுள்ளார். ஹேடன் குவித்த 380 ஓட்டங்கள் சாமான்யப்பட்டதல்ல. ஹேடன் மிகத்திறமைசாலிதான். ஆனால், உயர்தரம் என்று வருகையில் - அது லாறாதான் என்று முடிக்கிறார் முரளி.

ஆனால், இதனை ஒப்புக்கொள்ள மறுக்கிறார் அவுஸ்திரேலியாவின் டெஸ்ட் அணித்தலைவர் ஸ்ரீவ்வோ. ஸ்ரீவ்வோ ஹெய்டனை கிரிக்கெட் பிதாமகர் டொன் பிரட்மனுடன் ஒப்பிட்டு, ஹெய்டனே உலகின் சிறந்த துடுப்பாட்ட வீரர் என்று கூறுகிறார். தற்போதைய தரக்கணிப்பின்படி, ஹேடன் - லாறா - றிக்கிபொன்ரிங் என்ற வகையில், முதல் மூன்று இடங்களும் காணப்படுகின்றன.

இறுதியாகப் பார்க்கும்போது, ஹெய்டனை உலகின் அதிசிறந்த ஆட்டக்காரன் என ஸ்ரீவ்வோ நிலைநாட்ட முயற்சிப்பது, சிறிது அதிகபட்சமோ என்று எண்ணத்தோன்றுகின்றது. ஏனெனில் லாறா, சச்சின் இருவரின் தரத்துக்குவர, ஹெய்டனுக்கு இன்றும் கால இடைவெளி தேவையாக இருக்கும் என்பதே விமர்சகர்களின் கருத்து எனில், தற்போதைக்கு அவசரப்படாமல் இந்த மூன்று பேரும் மேலும் மேலும் அற்புதமாக விளையாடவேண்டும். அதை நாங்கள் ரசிக்கவேண்டும் என்று விரும்புவோமாக.

# முத்தரப்பு - ஒரு கண்ணோட்டம்

இந்திய- நியூசிலாந்து அணிகளுக்கிடையிலான கிரிக்கெட் டெஸ்ட் போட்டி முடிவுற்றதையடுத்து, பரபரப்பான முக்கோண கிரிக்கெட் சுற்றுப்போட்டி ஆரம்பத்துள்ளது. உலகச் சாம்பியனான அவுஸ்திரேலியா, அதற்குச் சிறிதும் சளைக்காத இந்தியா, அத்தோடு நியூசிலாந்து. இந்த



மூன்று அணிகளும் உலகின் தலைசிறந்த கிரிக்கெட் வீரர்களைக் கொண்ட அணிகள்.

அவுஸ்திரேலிய அணி தற்போது உலகச் சாம்பியன். இந்த அணியில் உள்ள அனைத்து வீரர்களும்- விளையாட்டிலும், வாய்த்தகராறு பண்ணுவதிலும் சிறந்தவாகள். ரிக்கிப் பொண்டிங், ஸ்டீவ்வோ, இம்ரான்கான் வரிசையில் இவரும் சிறந்த ஒருகப்டன். அணியினை கட்டுக்கோப்பில் வைத்திருப்பதுடன், அணியில் உள்ள வீரர்களை தகுந்த முறையில் கையாளுகிறார்.

அவுஸ்திரேலிய அணியில் இந்தமுறை வேகப்பந்து வீச்சாளர்களான பிரட் லீ, மக்ரா, ஜிலெஸ்பி ஆகியோர் விளையாடவில்லை. இந்த மூவரும் உலகக்கிண்ண கிரிக்கெட்போட்டியில், தங்களுடன் விளையாடிய இந்திய, நியூசிலாந்து அணிகள் உட்பட அனைத்து அணிகளையும் ஒரு கலக்குகலக்கியவர்கள். இந்த மூவரும் இல்லாததால், அவுஸ்திரேலிய அணி சிறிது பலவீனப்பட்டிருந்தது. ஆனால், அந்தப்பலவீனம் வில்லியம்ஸ், கிளார்க்,பிரக்கன், ஆகியோரால் சரிப்பட்டுவிட்டது.

உலகக்கோப்பை போட்டிக்குப்பின், அவுஸ்திரேலிய - இந்திய அணிகள் முக்கோணத்தொடரில் சந்தித்தது. இந்திய அணியில் சௌரவ் கங்குலி, ஜவகல் சிறிநாத், ஆஷிஷ் நெக்ரா ஆகியோர் விளையாடவல்லை. ரிக்கி பொண்டிங் இந்தியா வந்ததும் கூறினார், இந்தியாவில் வைத்து இந்திய அணியை தோற்கடிப்பது கடினம் என்று அதேபோல், முதல்போட்டியில் அவுஸ்திரேலிய அணி நன்றாக வாங்கிக்கட்டியது. போட்டிதொடங்கியதும் - முதல் ஓவரிலேயே வீரேந்தர் ஷேவாக் தன் அவசரப்புத்தியால் ஒரு ஓட்டமும் எடுக்காமல் ஆட்டமிழந்தார். ஆனால், அணியின் 'நட்சத்திர துடுப்பாட்ட வீரர் சச்சின் டெண்டுல்கர், வி.வி.எஸ் லக்ஸ்மன் ஆகியோரின் அதிரடி ஆட்டத்தால், இந்திய அணி 5 விக்கெட் இழப்பிற்கு 283 ஓட்டங்களைப் பெற்றது. அவுஸ்திரேலிய அணியும் அதிரடியாக ஆடத்தொடங்கி, பின்னர் இந்திய அணியின் சுழற்பந்து வீச்சாளர்களின் முன் சுருண்டது.

அடுத்து அவுஸ்திரேலிய - நியூசிலாந்து அணிகளுக்கிடையே நடைபெற்ற போட்டியில், அவுஸ்திரேலிய புதிய பந்து வீச்சாளர்கள் தமது திறமையை நன்றாகவே காட்டினார்கள். நியூசிலாந்து 97 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து, அவுஸ்திரேலியாவிடம் மண்டியிட்டது. துடுப்பாட்டத்திலும், அவுஸ்திரேலியா இந்தியாவிடம் விட்ட குறையை நியூசிலாந்திடம் தீர்த்தது. 17 ஓவர்களில் 2 விக்கெட்டு இழப்பிற்கு 101 ஓட்டங்களைப் பெற்று 8 விக்கெட்டுகளால் வென்றது.



நான்காவது போட்டியில் மீண்டும் இந்தியா - அவுஸ்திரேலியா மோதியது. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற அவுஸ்திரேலியா முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. அப்பொழுதே போட்டியின் முடிவை ஓரளவு ஊகிக்க கூடியதாக இருந்தது. அந்த ஊகத்தை மேலும் உறுதிப்படுத்தும் வண்ணம் அமைந்தது- அடம்கில்கிறிஸ்ற்றின் அதிரடி ஆட்டம். ஷகீர்கான், அஜித் அகர்கர் ஆகியோரின் பந்துகள் துவம்சம் ஆனது. இரண்டாவது ஓவரில் மத்தியூகைடன் ஒரு ஓட்டமும் எடுக்காமல் ஆட்டம் இழந்தார். பதிலுக்கு வந்த ரிக்கி பொண்டிங், தன் பங்குக்கு விளாசித்தள்ள ஒரு நிலையில் 5 ஓவருக்கு 53 ஓட்டங்கள் என்று இருந்தது. இது எங்குபோய் நிற்குமோ, உலகக்கிண்ண இறுதிப்போட்டிதானோ என்று இந்திய ரசிகர்கள் கலங்க, இந்திய அணியின் தற்போதைய கப்டன் ராகுல் ராவிட் 6 ஆவது ஓவரிலேயே சுழற்பந்து வீச்சாளர்களை களமிறக்கினார். ஹர்பஜன்சிங்கின் பந்து வீச்சில் மொகமட் கைப்பின் அபார பிடியில் ஆட்டமிழந்தார் கில்கிறிஸ்ட். பின்னர் சீரான இடைவெளியில் விக்கெட் டுக்கள் விழ டேர்மியன் மார்ட்டின், மைக்கல் பெவன் ஆகியோரின் ஆட்டத்தால், அவுஸ்திரெலியா 8 விக்கெட் இழப்பிற்கு 286 ஓட்டங்களை பெற்றது.



அடுத்துத் துடுப்பெடுத்தாடத் தொடங்கிய இந்திய அணியின் வீரேந்தர் சேவாக் ஒரு ஓட்டமும் எடுக்காமல் ஆட்டம் இழந்தார். அடுத்து வந்த லக்ஸ்மன் அதிரடியாக ஆடத் தொடங்க, ஒரு சிறிய நம்பிக்கை ஏற்பட்டது. ஆனால், அவரும் 21 ஓட்டங்களுக்கு ஆட் டமிழந்தார். பின்னர் வந்த சச்சின்- ராவிட் ஆகியோரின் நிதான ஆட்டத்தால், ஓட்ட எண்ணிக்கை உயர்ந்தது. ஆனால் சச்சின் போல்ட் ஆனபின் சிறிது நேரத்தின் பின் ராவிட்டும் ஆட்டமிழந்தார். பின்னர் அடுத்தடுத்து விக்கெட் விழ ஆரம்பித்தது. பார்த்திவ் பட்டேலின் நிதான ஆட்டத்தால் ஓட்ட எண்ணிக்கை 200 ஐ தாண்டியது. அவுஸ்திரேலியா 77 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

ஐந்தாவது போட்டியில் அவுஸ்திரெலிய- நியூசிலாந்து அணிகள் மோதின. இந்தப் போட்டியில் எப்பாடுபட்டாவது வெற்றி பெறுவது என்று கங்கணம் கட்டிக்கொண்டு, களமிறங்கிய நியூசிலாந்து அணி ஆரம்பத்தில் விக்கெட்டுக்களை இழந்தாலும், ஜேக்கப் ஓரத்தின் அபார ஆட்டத்தால் 9 விக்கெட் இழப்பிற்கு 258 ஓட்டங்களைப் பெற்றது. பிரட் வில்லியம்ஸ் 5 விக்கெட்டுக்களை பெற்றார்.

அடுத்து ஆடத்தொடங்கிய அவுஸ்திரேலிய அணி, ஆரம்பத்தில் விக்கெட்டுக்களை இழந்து தடுமாறி பின்னர் நிதானித்து இறுதியில் அன்ரூ சீமென்ஸ், பிக்சல் ஆகியோரின் அதிரடி ஆட்டத்தால் ஆவுஸ்திரேலியா போராடி வென்றது. 49 ஆவது ஓவரின் இறுதியில் அன்ரூ சீமென்ஸ் அடித்த பவுண்றியும், சிக்ஸரும் போட்டியை மாற்றி அமைந்தது.

6 ஆவது போட்டி இந்திய - நியூசிலாந்து அணிகளுக்கிடையில் நடைபெற்றது. இந்தப் போட்டி மிகவும் முக்கிய ஒரு போட்டி. நடைபெற்ற போட்டிகளில், ஆவுஸ்திரேலியா 18 புள்ளிகளுடன் முன்னணியிலும், இந்திய அணி 8 புள்ளிகளுடனும், நியூசிலாந்து 4 புள்ளிகளுடனும் உள்ளன. இந்நிலையில் தொடங்கிய இந்தப் போட்டியில் -முதலில் இந்தியா துடுப்பெடுத்தாடத் தொடங்கியது. நட்சத்திர துடுப்பாட்டவீரர், மாஸ்ரர் பற்ஸ்மன் சச்சின் டெண்டுல்கர் 14 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க, இந்திய அணி ஆட்டம் கண்டது. பின்னர் வி.வி.எஸ் லக்ஸ்மன், ராவிட், யுவராஜ்சிங் என்று அடுத்தடுத்து ஒவ்வொருவராக ஆட்டம் இழக்க, மொகமட் கைப் மட்டும் 108 பந்துகளில் 64 ஓட்டங்களைப் பெற்றார். இறுதியில் வந்த ஷகீர்கான்



13 பந்துகளில், 2 பவுண்றிகள், 2 சிக் ஸர்கள் அடங்கலாக 33 ஓட்டங்களைப் பெற்று அணியை 9 விக்கெட் இழப்பிற்கு 246 ஓட்டங்கள் என்ற நிலைக்கு கொண்டு வந்தார்.

அடுத்து ஆடத்தொடங்கிய நியூசிலாந்து அணி, ஆரம்பத்தில் 4 முக்கிய விக்கெட்டுக்களை இழந்தாலும், பின்னர் ஸ்டைரிஸ், மக்மிலன் ஆகியோரின் நிதான ஆட்டத்தால், 44 ஓவர்களில் வெற்றி இலக்கை எட்டினார்கள். இச்சுற்றுப்போட்டியில் நியூசிலாந்து அணி பெற்ற முதல் வெற்றி இதுவாகும்.

இந்த முக்கோணத் தொடரில், இந்திய அணியின் வீரேந்தர் சேவாக் சிறப்பாக ஆடவில்லை. அதேபோல்தான் ஸ்ரீபன் பிளமிங்கும். சச்சின் டெண்டுல்கர் ஆரம்பத் துடுப்பாட்ட வீரராக களமிறங்கி தன் பங்கைச் சிறப்பாகச் செய்துவருகிறார்.

தற்போது நடைபெறும் போட்டி, இந்திய அணிக்கு முக்கிய ஒரு போட்டியாகும். ஏனெனில், இவர்கள் அடுத்து மேற்கொள்ள இருக்கும் அவுஸ்திரேலிய சுற்றுப்பயணத்திற்கு இது ஒரு சிறந்த பயிற்சிப்போட்டியாக அமையும். அவுஸ்திரேலியர்களும் இப்போட்டியில் வைத்துத்தான் சச்சினின் துடுப்பாட்டத்தை ஆராய்ச்சிசெய்யவுள்ளனர். இவர்கள் அஞ்சும் அடுத்தவீரர் லக்ஸ்மன்.

இந்திய அணியும் அங்கு பலத்த சவாலை எதிர்நோக்கவுள்ளனர். எனவே, அடுத்தடுத்து வரவிருக்கும் சிறந்த போட்டிகள் கிரிக்கெட் ரசிகர்களுக்கு குஷியான ஒரு விருந்தாகும்.

**- மாயவன்.**

# பிதாமகன்

கிரிக்கெட் தொடர்பில் கதைக்கும்போது, பயிற்றுநர்கள் பற்றிய கருத்துக்களும், பிரபல்யம் நிறைந்த விமர்சகர்களால் முன்வைக்கப்படுகின்றன. இந்தவகையில், நிறையவே பயிற்றுநர்கள் மழைக்கு முளைக்கும் காளான்கள்போல தோற்றம் பெறுகிறார்கள். இவர்கள் - சில தனிநிறுவனங்களின் ஊடாகப்பயிற்சிபெற்று வெளியேறுகிறார்கள். இதில் என்ன வேடிக்கை என்றால் - இவர்கள் எல்லாம் 'குளோனிங்' முறையில் உருவாக்கப்பட்டவர்களாகவே இருக்கின்றார்கள் என்று கூறியிருக்கிறார். இது தொடர்பாகச் சான்றாதாரம் காட்டும் அவர்தான், அண்மையில் சந்தித்த ஒரு பயிற்றுநர், தனது மாவட்டத்துக்கான வீரர்களைத் தெரிவு செய்வது கடினமாக இருப்பதாவும், இதற்குக்காரணம்- எல்லோரும் ஒரே விதமாக விளையாடுவதுதான் என்றும் சலிப்புடன் கூறினாராம். பயிற்றுநர் பல்துறை விற்பன்னாராக இல்லாதவிடத்து, இப்படியான தடங்கல்கள் ஏற்படத்தான்செய்யும்.



டொன் பிரட்மன் இனம் காணும்திறமை

ஒரேவிதமான பயிற்சிகளை- இப்பயிற்றுநர்கள் பெற்றுகொள்வது, பல வகையில் பாதகத்தைத்கூட உருவாக்கும். அதாவது, மிகத்திறமையான வீச்சு நிறைந்த வீரர்களை உருவாக்குவது கஷ்டமான காரியமாக இருக்கும் என்றார் அவர். அதிலும்கூட, இந்தக் குறைபாட்டைக் கிரிக்கெட்டின் உயர்பீடங்களும்கூட, கண்டும் காணாமலும் விட்டுவிடுவதுதான் துயரம் என்கிறார்.

அவர் மேலும் கருத்துக்கூறுகையில் - பயிற்றுநர்கள் அடிமட்டதிலிருந்து, மேல் நிலைவரைக்கும் படிப்படியாவும், தனித்தனியாகவும் பயிற்றுவிக்கப்படவேண்டும். அப்படிச் செய்தால்தான், ஒவ்வொருவரின் தனித்திறனையும் வெளிக்கொணரமுடியும். அதன்மூலமாக இவர்களின் உதவியுடன், தலைசிறந்த வீரர்களை வெளிக்கொணரமுடியும் என்று கூறியிருக்கிறார். இங்கு கிரிக்கெட் சகாப்தம் டொன் பிரட்மன் - 1935 இல் வெளியிட்ட 'HOW TO PLAY CRICKET' என்ற நூலிலிருந்து ஒரு கருத்தைச் சுட்டிக்காட்டுகிறார்

'எந்தவேளையிலும், ஒவ்வொரு தனிநபரினதும் இயற்கை ஆற்றல்களையும், தனித்திறமைகளையும் வளர்த்தெடுக்கவேண்டும் என்பதில் நான்மிகப்பெரும் நம்பிக்கை வைத்திருக்கிறேன். எல்லாப் பயிற்றுநர்களுக்கும் இந்த வார்த்தைகளைக் கவனத்தில் கொள்ளுமாறு வேண்டுகிறேன்".

மேற்கிந்திய சுழற்பந்துவீச்சாளர், லான்ஸ் கிப்ஸ் 300 விக்கெட்டுகள் எடுத்தவர். அதேபோல், மல்கம் மார்ஷல் 376 விக்கெட்டுகள் சரித்தவர். இன்று தென்னாபிரிக்காவின் போல் அடம்ஸ் - இந்தவகையில் 42 டெஸ்ட் போட்டிகளில் 129 விக்கெட்டுகள் பெற்றவர். இவர்கள் எல்லோருமே நியாயமான கிரிக்கெட் விதிக்கும் புறம்பான ACTIONS கொண்டிருந்தவர்கள். ஆனால், இவர்களது பயிற்றுநர்கள் 'குளோனிங்' முறையில் அன்றி, அவர்களது திறமைகளை இனங்கண்டு, தூண்டிவிட்டார்கள். அவர்கள் சுடர்விட்டார்கள்.

இந்த நிலையில், இன்னாரை நான்தான் உயர்த்திவிட்டேன், அவரது புகழுக்கு நான்தான் காரணம் என்று முழங்குவது வெறும் கேலிக்கூத்து என்கிறார் விமர்சகர். இவர் மேலும் கூறுகையில் - ஆமாம் நீர்தான் உயர்த்திவிட்டீர். ஆனால், நீர் பயிற்றுவித்திருக்காவிட்டால், அவன் இன்னும் கூடுதலாக உயர்ந்திருப்பார் என்கிறார் சாகசமாக, ஒரு உண்மையான பயிற்றுநர் - ஒரு இராணுவ அதிகாரியாக இருக்கமுடியாது. ஒரு நல்ல பயிற்றுநர்- ஒரு அவதானிப்பாளன், சரியானமுறையில் இனம் காண்பவர். அவன் ஒரு வழிகாட்டிமட்டுமே என்கிறார் கிரிக்கெட் விமர்சகர். மீண்டும் பிரட்மனின் கூற்றுப் பற்றி விமர்சகர் எழுதுகிறார் "நான் உங்களுடன் ஒரு சர்வாதிகாரியாகப் பேசவில்லையென்று எடுத்துக்கொள்ளுங்கள். நான் இந்த விதமான முறைகளைப் பின்பற்றினேன், வெற்றிகண்டேன். நீங்கள் இந்தப் பாணிகளையும் பின் பற்றியதுண்டா? இல்லையென்றால், ஒருமுறை பின்பற்றிப்பாருங்களேன் என்றவாறு செல்கிறது பிரட்மனின் அணுகுமுறை.

எனவே, இன்று பயிற்றுநர்கள் - வீரர்களைக்கையாளும் முறைக்கும், கையாளவேண்டிய முறைக்கும் பாரிய வேறுபாடுகள் இருக்கின்றன என்பது தெரியவருகிறது. எல்லாப் பயிற்றுநர்களையும் இந்தவகைக்குள் அடக்கிவிட முடியாவிட்டாலும், அநேகர் குற்றவாளிக் கூண்டில் நிறுத்தப்படுவதைக் காணமுடிகிறது. இறுதியாக ஒன்றைக் கூறலாம் -வீரர்களை, அணிகளை வெற்றிப்பாதையில் கொண்டுசெல்பவர்கள் - பயிற்றுநர்கள் மற்றும் நிர்வாகிகள் என்ற மாயை முறியடிக்கப்பட்டுக்கொண்டிருக்கிறது என்பதே அது. ஏனெனில், பயிற்றுநர்கள் இல்லாமல், வீரர்கள் உயர்தரத்தை எட்டமுடியும். ஆனால், வீரர்கள் இல்லாவிட்டால், பயிற்றுநர்கள் என்ற பதவிக்கே இடமில்லாமல் போய்விடும். எனவே, வீரர்களுக்கு முக்கியத்துவம் கொடுப்போம். பலரும் அவர்களை அறிந்துகொள்ள முயற்சிகள் எடுப்போம். அதற்கான பணியை நாங்கள் பின்னணியில் நின்று செய்வோம். திறமையான வீரர்களுக்குக் கிடைக்கும் அங்கீகாரம் - என்றும் திறமையானவர்களை உருவாக்கும்.

**ஜோஸப் கிருஷ்ணா**

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanadu.com

**சிந்தனைக்கு**
நாள்தொறும் நாடி முறைசெய்யா மன்னவன்
நாள்தொறும் நாடு கெடும்
-திருக்குறள்.

## நமது நோக்கு

### அரசியல் சறுக்கலில் சமாதான ஆடுகளம்

சிறிலங்கா ஜனாதிபதி சந்திரிகா, நேற்று முன்தினம் இரவு நாட்டு மக்களுக்கு தன்னிலை விளக்கவுரையொன்றை நிகழ்த்தி, கடந்த சில நாட்களாக தான் மேற்கொண்டுவரும் நடவடிக்கைகளுக்கு நியாயம் கற்பிக்க முயன்றுள்ளார்.

இது ஒரு வழமையான நடவடிக்கையே ஆகும். சரியோ, பிழையோ ஒவ்வொரு தரப்பிலிருந்தும் தமது செயற்பாடுகளுக்கு நியாயம் கற்பிக்கவல்ல காரணிகளை உருவாக்கிக் கொள்கிறார்கள். அல்லது சட்டத்திலிருந்து தேடிக்கொள்கிறார்கள். எதிர்த்தரப்பினர் தமது நிலைப்பாட்டை வலுப்படுத்தவும், தமது செயற்பாட்டை தர்க்கமற்றும் சட்டரீதியாக நிலைப்படுத்தவும், எந்த வகையிலோ சட்டமும் நெழிவு, சுழிவுகளை கொண்டதாகவும் அமைந்துவிடுகிறது... இல்லையில்லை அப்படித்தான் உருவாக்கப்பட்டுள்ளது.

இதுதான் ஜனநாயகத்திலுள்ள வசதியாகும். இந்த வசதியை பயன்படுத்தியே அரசியல்வாதிகள் அனைத்தையும் செய்கிறார்கள்... குற்றச் செயல்கள், மோசடிகள், ஊழல்கள் அதிகார துஷ்பிரயோகம் என அனைத்தையும் செய்துவிட்டு தப்பியும்கொள்கிறார்கள்.

இந்தக் குற்றவாளிகளான அரசியல் பிரமுகர்களை எப்படியோ பாதுகாக்க உதவும் சட்டம், அப்பாவிகளை அனைத்து விடயங்களிலும் அடக்கி, ஒடுக்கி கண்டித்தும் விடுகிறது. அதற்கு மனித தர்மத்துக்கு அப்பால் விலகிநின்று சட்டத்தளத்தில் நின்றுகொண்டு நீதி, நியாயத்தையும் கற்பித்து விடுகிறது. அதனை நிரூபித்தும்விடுகின்றது.

ஆதிக்க ஆட்சி, அகங்கார அரசியல், அதிகார பலம் எப்போதுமே சுயநல அடிப்படையிலேயே பிரச்சினையை அனுகும், பேசும், செயற்படும் என்பதுதான் யதார்த்தம்.

இன்று சிறிலங்காவில் நடைபெற்றுள்ளதும் இதுவேதான். ஜனாதிபதியின் அதிகார பலத்தின் வெளிப்படுத்தல்கள் அரசியலில் தனது தாக்கத்தையும் அதையொட்டிய பாதிப்பையும் ஏற்படுத்தத் தொடங்கியுள்ள இவ்வேளையில், பிரதமர் தலைமையிலான அரசின் எதிர்காலச் செயற்பாடுகள் எவ்வாறு அமையப்போகிறது என்பது குறித்த கேள்விகளுக்கான பதிலை எதிர்வுகூறுதல் கடினமாகும்.

பாதுகாப்பு அமைச்சு உட்பட மூன்று அமைச்சுகளை பொறுப்பேற்றுள்ள ஜனாதிபதியின், நடவடிக்கையுடன் ஒத்துப்போக வேண்டும் எனவும் இதில் முரண்டுபிடிப்பதற்கும் சட்டரீதியாக வலுவில்லை எனவும், பிரதமர் தனது அமைச்சர்களுக்கும் அறிவுறுத்தல் செய்திருப்பதாகத் தெரிகிறது. இது ஜனாதிபதியின் அதிகார பலத்தின் அசைக்க முடியாத தன்மையை வெளிப்படுத்துவதாக அமைந்துள்ளது.

சமாதான நகர்வுகள் அனைத்தும் பாதுகாப்பு அமைச்சின் செயற்பாடுகளுடன் தொடர்புடையவையாகும். இப்போது சமாதான நகர்வுகளைத் தொடர்ந்தும் அரசு மேற்கொள்ளவேண்டும் என்று, ஜனாதிபதி கூறியிருப்பதால் பிரச்சினை மேலும் சிக்கலாகும் நிலையே தோன்றியுள்ளது.

பாதுகாப்பு அமைச்சை ஜனாதிபதியும், சமாதான நகர்வுகளை அரசும் மேற்கொள்ளும் நிலையில், விடுதலைப்புலிகள் சமர்ப்பித்துள்ள இடைக்கால நிர்வாக அதிகார சபைக்கான திட்டவரைபின் எதிர்காலத்தை யார் தீர்மானிக்கப் போகிறார்கள்?

சர்வதேச சமூகம் இன்னமும் சமாதானச் செயற்பாடுகளையே ஆதரிக்கின்றது. இதற்கான அழுத்த, அறிவுறுத்தல்கள் அரசிற்கும், ஜனாதிபதிக்கும் தொடர்ந்தும் சர்வதேச சமூகத்தால் சிறிலங்காவுக்கு வழங்கப்பட்டே வருகின்றன.

இந்த நிலையில் இருவேறு முரண்பட்ட திசைகளை நோக்கி நிற்கும் பிரதமரும், ஜனாதிபதியும் சமாதான முயற்சிகளில் எந்தவகையில் ஒருமை இயக்கம் காணப் போகிறார்களாம்...!

அரசினை எதிர்த்து ஜனாதிபதியின் செயற்பாடுகளுக்கு வரவேற்பு, வாழ்த்தைக் கூறும் ஜே.வி.பி, சிஹல உறுமய போன்ற அமைப்புக்கள் நோர்வேயின் சமாதான ஏற்பாட்டு முயற்சிகளையோ, விடுதலைப்புலிகளுடனான பேச்சுவார்த்தைகளையோ முழுமையாக அங்கீகரிக்கப் போவதில்லை.

அதேபோன்று சகல கட்சிகளையம் உள்ளடக்கிய தேசிய நல்லிணக்க அரசொன்றை அமைப்பதற்கான ஜனாதிபதியின் அழைப்பையும் அவர்கள் ஏற்கப்போவதும் இல்லை.

பிரதமர் தன்னுடைய அரசின் உறுப்பினர் ஆதரவுப் பலத்தை, தற்போதைக்கு நிரூபித்துக்காட்டியுள்ள நிலையில் சந்திரிகா எத்தகைய மாற்று நடவடிக்கையை எடுக்கப்போகிறார் என்பதே இப்போதுள்ள குழப்பங்களுக்கெல்லாம் காரணம்.

இதேவேளை, இனிமேல் சமாதான நகர்வுகளில் ஏற்படும் பாதிப்புகள், பின்னடைவுகளுக்கும் பாதுகாப்பு அமைச்சை பொறுப்பேற்றுள்ள ஜனாதிபதியே முழுப் பொறுப்பு என ரணில் கூறியுள்ளமையானது, தனது சுமையை ஜனாதிபதியின் தலையில் சுமத்திவிட்டார் என்பதையே வெளிப்படுத்தியுள்ளது.

இந்நிலையில் சிறிலங்காவின் அரசியல் ஆடுகளம் மீண்டுமொரு இரட்டை ஆட்சியின் பலப்பரீட்சைக்கான களமாக மாறிவிட்டது என்பதில் சந்தேகமே இல்லை.

## நாடும் நடப்பும்




# கொடக்காவ பொருளாதார கட்டடத்தில் ஜே.வி.பி - பொதுமக்கள் கைகலப்பு!

## ஐந்துபேர் காயமடைந்தனர்

(கொழும்பு)

கொடக்காவ பொருளாதாரக் கட்டடத்தின் அருகில், மக்கள் விடுதலை முன்னணி உறுப்பினர்களுக்கும், பொதுமக்களுக்கும் இடையில் ஏற்பட்ட கைகலப்பின்போது பொதுமக்கள் கைகளில் இருந்த பொருட்களால் தாக்கியதில் ஐவர் காயமடைந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் இடம்பெற்றுள்ளது. கொழும்பில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டப் பேரணியில் கலந்துகொள்வதற்காக இரண்டு வாகனங்களில் வந்த ஜே.வி.பி உறுப்பினர்கள், கொடக்காவ பொருளாதார நிலையக் கட்டடத்தில் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டபோதே - பொதுமக்களுக்கும், இவர்களுக்கும் வாக்குவாதம் ஏற்பட்டது.

இதன்போது, பொலிஸார் ஒருவரின் துப்பாக்கியை ஜே.வி.பி உறுப்பினர் ஒருவர் பறிக்கமுயன்றபோது பொலிஸார் ஆகாயத்தை நோக்கி துப்பாக்கி வேட்டுக்களை தீர்த்துள்ளனர்.

## கல்வியியற் கல்லூரி மாணவர்களின் டிப்ளோமா இறுதிப்பரீட்சை டிசம்பரில்!

தேசிய கல்வியியற் கல்லூரிகளில் இரண்டாம் வருடத்தைப் பூர்த்தி செய்த பயிலுனர்களுக்கு, கற்பித்தல் தேசிய டிப்ளோமாவுக்கான இறுதிப் பரீட்சை எதிர்வரும் டிசம்பர் மாதம் இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தால் நடத்தப்படவிருக்கின்றது.

இதன்படி, டிசம்பர் மாதம் 2 ஆம் திகதி தொடக்கம் 9 ஆம் திகதி வரை எழுத்துப் பரீட்சையும், டிசம்பர் 11 ஆம் திகதி தொடக்கம் 14 ஆம் திகதி வரை செய்முறைப் பரீட்சையும் நடத்தப்படவிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (07)

## சமாதானப் பேச்சை முன்னெடுப்பதற்கு நாடாளுமன்றைக் கூட்டுவது அவசியம்!

(கொழும்பு)

நாடாளுமன்றத்தைக் மீளக் கூட்டி - புலிகளுடனான சமாதானப் பேச்சுக்கள் ஆரம்பிக்கப்பட வழிசெய்யும் வரை முன்னுரிமைப்படுத்திச் செயற்படவுள்ளதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

அமெரிக்காவிலிருந்து நாடு திரும்பிய பின்னர் கருத்து வெளியிட்டபோதே பிரதமர் இவ்வாறு குறிப்பிட்டார்.

சமாதானப் பேச்சுக்களை முன்னெடுத்துச் செல்வதற்கு முக்கியமான களமாக நாடாளுமன்றம் இருக்கிறது. நாடாளுமன்றம் முடக்கப்பட்டுள்ள சூழ்நிலையில் சமாதானப் பேச்சுக்களை முன்னெடுத்துச் செல்ல முடியாது என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

## இயல்புநிலை பாதிக்கப்படவில்லை உல்லாசப் பயணிகளுக்கு அழைப்பு

தற்போதைய அரசியல் நடவடிக்கைகள் - நாட்டின் இயல்பு நிலையைப் பாதிக்கவில்லை என்றும், உல்லாசப்பிரயாணிகள் தாராளமாக இலங்கைக்கு விஜயம் செய்யலாம் என்றும், உல்லாசப் பிரயாணத்துறை அமைச்சு அழைப்பு விடுத்துள்ளது.

இதுகுறித்து உல்லாசப் பிரயாணத்துறை அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது-

கடந்த 4 ஆம் திகதிக்குப் பின்னர் ஏற்பட்டுள்ள அரசியல் சூழல் - ஒரு அரசியல் அமைப்பு ரீதியாக ஏற்பட்டதே தவிர, இது நாட்டின் இயல்பு நிலையைப் பாதிக்கவில்லை.

நாட்டில் அவரசகாலச் சட்டம் அமுல்செய்யப்படவில்லை. கூடுதலாக உல்லாசப் பிரயாணிகள் வரும் இந்தக் காலநிலையில், இங்கிலாந்து கிரிக்கெற் அணியை வரவேற்கத் தயாராக உள்ளதாகவும், அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தற்போதைய அரசியல் நிலை குறித்து ஆராய; ஹெல்கிசன், சொல்ஹெய்ம் நாளை வருகை

(கொழும்பு)

நோர்வேயின் பிரதி வெளியுறவு அமைச்சர் விதார் ஹெல்கிசன் மற்றும் சிறப்புத் தூதுவர் எரிக்சொல்ஹெய்ம் ஆகியோர்- நாளை இலங்கை வரவுள்ளனர்.

இலங்கையின் தற்போதைய அரசியல்நிலை குறித்து அறிவதற்காகவே இவர்கள் இங்குவரவுள்ளனர்.

மூன்றுநாட்கள் உத்தியோக பூர்வ விஜயம் ஒன்றை மேற்கொணடு இங்குவரும் இவர்கள், முக்கிய அரசயற் தலைவர்கள் பலரையும் சந்திதது உரையாடவுள்ளார்கள் எனத் தெரிய வருகின்றது. (01)

## படையினருக்கு பொலிஸ் அதிகாரம் ஜனாதிபதி சந்திரிகா வழங்கியுள்ளார்

(கொழும்பு)

பொலிஸாருக்கு இருக்கும் அனைத்து அதிகாரங்களையும் ஜனாதிபதி - படையினருக்கும் வழங்கியுள்ளார்.

நேற்று முதல், இந்த அதிகாரங்களைப் படையினருக்கு வழங்குவது பற்றி உத்தியோகபூர்வமாக வர்த்தமானியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி உள்துறை, ஊடகத்துறை, பாதுகாப்புத்துறை ஆகிய அமைச்சுக்களை கையேற்ற சில தினங்களில், இந்த் அதிகாரத்தை படையினருக்கு வழங்கியுள்ளார்.

நாட்டு நிலைமையைக் கருத்திற்கொண்டு, தாம் இந்த நடவடிக்கையை எடுத்துள்ளதாக ஜனாதிபதி தெரிவித்தார்.

## கட்சித் தலைவர்கள் கூட்டம் நாளை நடைபெறவுள்ளது

(கொழும்பு)

நாடாளுமன்றம் ஒத்திவைக்கப்பட்டுள்ளதன் காரணமாக, பிற்போடப்பட்டுள்ள வரவு - செலவுத் திட்டம் தொடர்பாக ஆராயும் பொருட்டே, கட்சித் தலைவர்களின் கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக சபாநாயகர் ஜோசப் மைக்கல் பெரேரா தெரிவித்தார்.

அரசாங்கத்தின் வரவு - செலவுத் திட்டம், எதிர்வரும் 12 ஆம் திகதி புதன்கிழமை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவிருந்தது.

எனினும், நாடாளுமன்ற அமர்வுகளை - ஜனாதிபதி ஒத்திவைத்துள்ளதன் காரணமாக, வரவு - செலவுத் திட்டம் உரிய தினத்தில் சமர்ப்பிக்கப்பட முடியாதநிலை ஏற்பட்டுள்ளது.

தற்போதைய சூழ்நிலையில் வரவு - செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்படுவது தொடர்பாகவும், அதன் மீதான விவாதங்களை நடத்துவதற்கான நேரத்தினை ஒதுக்குவது தொடர்பாகவும் - கட்சிகளின் கூட்டத்தில் ஆராயப்படும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

# ஆட்சி அதிகார மாற்றத்திற்கு விலை பேசப்படும் எம்.பிக்கள்

தமிழீழ விடுதலைப்புலிகளால் வடக்கு - கிழக்கின் இடைக்காலத் திட்டவரைபு சமர்ப்பிக்கப்பட்ட பின்னர், தென்னிலங்கையில் ஜனாதிபதியினால் ஏற்படுத்தப்பட்ட மாற்றங்கள் இலங்கையில் இன்று அரசியல் நெருக்கடியைக் கொண்டுவந்துள்ளன. இவர்களின் அரசியல் மைப்புப்பற்றி, பல்வேறு விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டு வருகின்றன. இந்த அரசியல் மைப்புதான், தமிழர்களின் பிரச்சினைக்கான


ரணில்

காரணம் எனக்கூறப்படுகின்றது. அந்தளவு முழுமையற்ற இலங்கையின் அரசியலமைப் பின்கீழேயே - ஜனாதிபதி இந்த மாற்றங்களைச் செய்துள்ளார். அரசியலமைப்பு 129 படி, பாதுகாப்பு படையினரின் கட்டளையிடும் பொறுப்பு குறித்து, ஜனாதிபதி உயர்நீதி மன்றததில் தாக்கல் செய்த மனு அவருக்குகே வாய்ப்பைக் கொடுத்துள்ளது. 2001 ஆம் ஆண்டு ஜனநாயகரீதியில் தெரிவுசெய்யப்பட்ட அரசாங்கம் ஒன்றின்மீது, 1999 ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலிலே வெற்றி


ஜோன் அமரதுங்க

பெற்ற ஒருவர் - அதிகாரம் செலுத்திய செயற்பாடே இன்று இடம்பெற்றுள்ளது. இலங்கையில் இருந்த அரசியலமைப்பின் நியாயத் தன்மையை, எம்மால் தெரிந்து கொள்ளமுடிகிறது. ஜனாதிபதியின் கட்சி 2001 ஆம் ஆண்டில் பொதுத் தேர்தலில் தோல்வி கண்டபோதும், அன்றிலிருந்தே அந்தக் கட்சி ஐக்கிய தேசியக்கட்சிக்கு ஏதோவொரு வகையில், பிரச்சினையாகவே இருந்து வருகிறது. அனைத்து அதிகாரம் பொருந்திய ஜனாதிபதி- அந்தக் கட்சியில் தலையிடாது இருப்பதே இதற்கு பிரதான காரணமாகும். இந்த அதிகாரம் முன்னர் பல தடவைகள் பரீட்சித்துப் பார்க்கப்பட இருந்தபோதும், அப்போது சூழ்நிலைகள் வாய்ப்பாக அமைந்திருக்கவில்லை. எனினும், தற்போதைய சூழ்நிலை அதற்கு வாய்ப்பை ஏற்படுத்தியுள்ளபோதும், இலங்கையின் எதிர்காலமே ஸ்தம்பிக்கும் ஒரு பயப்பீதியை அது மக்கள் மத்தியில் ஏற்படுத்தி விட்டது.

ஆரம்பத்திலிருந்து, தமிழீழ விடுதலைப் புலிகளுடனான போர்நிறுத்த ஒப்பந்தத்தின் போது, தமக்கு அறிவிக்கப்படவில்லை என்ற ஆதங்கம் ஜனாதிபதிக்கு இருந்துவந்தது. அதனை அவர் பலதடவைகள் கூறிவந்தார். ஆனால், அதற்கான பதில்களோ அல்லது நியாயங்களோ கூறப்படவில்லை. இந்த நிலையை சுட்டிக்காட்டி அவர், அழைத்த நோர்வே ஏற்பாட்டாளரையும்கூட குறைகாண ஆரம்பித்தார்.

நோர்வே தரப்பினர் ஏற்பாட்டாளர் நிலையிலிருந்து, மத்தியஸ்தர நிலைக்குச் சென்றுவிட்டதாகவே அவர் உணர்கிறார். இது அண்டை நாடான இந்தியாவை பகைத்துக்கொள்ளக் கூடியநிலையை ஏற்படுத்திவிடுமோ என்ற அச்சம் ஜனாதிபதிக்கு உருவாகிவிட்டது.

மறுபுறத்தில் நோர்வே ஏற்பாட்டாளர்கள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் அரசாங்கம் பதவிக்கு வந்ததன் பின்னர், இலங்கைக்கு வருகிறபோது மரியாதை நிமித்தம் ஜனாதிபதியையும் சந்திக்கும் சந்தர்ப்பம் ஏற்படுத்திக்கொடுக்கப்பட்டது. அதுவும் குறிப்பிட்ட காலகட்டத்தில் கைவிடப்பட்டது. நோர்வே ஏற்பாட்டாளர்களின் சந்திப்பு அட்டவணையில், ஜனாதிபதி இடம்பெறவில்லை இதுவே ஜனாதிபதி இதற்கெதிராக தருணம் பார்க்க வேண்டிய கட்டாயத்தை ஏற்படுத்தி விட்டது. அது இன்று கைகூடிவிட்டது. எனவே, பலதடவைகள் ஜனாதிபதி இந்த நடவடிக்கைகள் குறித்து, எச்சரிக்கை விடுத்துவந்தார். முதன்முறை அவர் விடுத்த எச்சரிக்கை சற்றுப் பய உணர்வை அரசாங்கத்திற்கு ஏற்படுத்தியபோதும், பின்னர் அது ஒரு சாதாரண நிகழ்வாகக் கொள்ளப்பட்டது. ஜனாதிபதி எங்குபோய் உரையாற்றினாலும், தனது அதிகாரம் குறித்து அரசாங்கத்திற்கு எச்சரிக்கை விடுப்பது வழமையான விடயமாக மாறி இருந்தது. இது ஐக்கிய தேசியக்கட்சி அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் பயமற்ற தன்மையை ஏற்படுத்தியது.

ஜனாதிபதி பயமுறுத்தல் மாத்திரமே விடுப்பார். எதனையும் செயலில் காட்டமாட்டார் என, அந்தக்கட்சி நினைத்தது. இதன் காரணமாக எந்தவொரு விடயத்தையும் ஜனாதிபதின் ஆலோசனை இல்லாமலேயே ஐக்கிய தேசியக்கட்சி முன்கொண்டு செல்ல முயற்சித்தது. இது ஜனாதிபதிக்குத் தனிப்பட்ட ரீதியில் செல்வாக்கை இழக்கச்செய்ததுடன் - அவரது கட்சி மற்றும் கட்சி ஆதரவா


இம்தியாஸ்பாக்கீர் மாக்கார்

ளர்கள் மத்தியில் அவரின் செயற்படும் நிலைப்பாட்டை கேள்விக்குரியதாக்கியது. ஜனாதிபதியைப் பொறுத்தவரையில், இன்னும் இரண்டு ஆண்டுகள் அவரின் பதவிக் காலம் இருக்கிறது. அதற்குள் இலங்கை இனப்பிரச்சினைக்கு, அவரால் உரியதீர்வு எதனையும் தந்துவிடமுடியாது. ஏற்கனவே அவர் 2001 ஆம் ஆண்டு கொண்டுவந்த இனப்பிரச்சினைக்கான தீர்வுத்திட்டம் போன்ற வரைபைக்கூட, இனிவரும் காலத்தில்

## தெற்குத் திசையினிலே

### கொழும்பிலிருந்து இந்திரஜித்

கொண்டுவர முடியாது.

ஏனெனில், முன்னர் ஜனாதிபதி - அந்தத் திட்டவரைபை கொண்டுவந்தபோது, அவருக்கு அவரின் பொதுஜன ஐக்கிய முன்னணியில் நல்ல வரவேற்பு இருந்தது. அன்று அவருடைய கட்சி நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையினையும் கொண்டிருந்தது.

ஆனால், இன்று பொதுஜன ஐக்கிய முன்னணி உத்தியோகபூர்வம் இல்லாமல் கூட்டுச் சேர்ந்திருக்கும் கட்சிகள் நாட்டின் அதிகார பரவலாக்கமே இடம்பெறக்கூடாது எனச் சொல்லக்கூடிய கட்சிகளாக இருக்கின்றன. எனவே, ஜனாதிபதிக்கு புதிய தீர்வுத் திட்டம் ஒன்றையோ அல்லது 2001 ஆம் ஆண்டு தீர்வுத்திட்டத்தையோ முன்வைத்து, தமிழீழ விடுதலைப்புலிகளுடன் பேசக்கூடிய வாய்ப்புக்கள் இல்லை. அவ்வாறான பேச்சுவார்த்தை வாய்பை ஏற்படுத்திக்கொள்ள வேண்டுமானால், ஒன்று ஜனாதிபதியின் கட்சியும், ஐக்கிய தேசியக்கட்சியும் இனப்பிரச்சினையைத் தீர்க்கவேண்டும் என்ற நோக்கில் 2001 ஆம் ஆண்டில் ஜனாதிபதி முன்வைத்த தீர்வுத்திட்டத்தை ஏற்றுக்கொண்டு, பேச்சுவார்த்தை நடத்த முன்வரவேண்டும். அல்லது தற்போது விடுதலைப்புலிகள் முன்வைத்துள்ள இடைக்கால தீர்வுத்திட்டத்தின் அடிப்படையில், ஐக்கிய தேசிக்கட்சியின் முன்னெடுப்புக்கு ஜனாதிபதி இடம்தரவேண்டும். இவை இரண்டுமே இடம்பெறக்கூடிய சந்தர்ப்பங்கள் இலையென்றே கருதப்படுகிறது.

சரி - இன்றைய அரசியல் நெருக்கடிக்கு தீர்வு என்னவாக இருக்கும் என்ற எதிர்வு கூறலை இறுதியாகப் பார்ப்போம், அதற்கு முன்னர் - ஜனாதிபதியின் அமைச்சுக்களைப் பொறுப்பேற்கும் அதிரடி நடவடிக்கை குறித்து சற்று பார்த்துவிடுவோம். இவ்வளவு நாட்களாக ஜனாதிபதி நாட்டின் அறிவியலில் தமது அதிகாரத்ததைப் பயன்படுத்தி, மாற்றம் ஒன்றைக் கொண்டுவருவார் என எதிர்பார்த்தபோதெல்லாம், அது நடக்கவில்லை. ஜனாதிபதிக்கு சந்தர்ப்பம், வாய்ப்பாகவும் அமையவில்லை. தாம் எடுக்கும் நடவடிக்கை


சந்திரிகா

காரணமாக, ஐக்கிய தேசிய கட்சிக்கு செல்வாக்கு உயர்ந்துவிடக்கூடும் என்பதில் ஜனாதிபதி கவனம் செலுத்தியமையே இதற்கான காரணமாகும். தற்சமயம் அவர் எடுத்துள்ள நடவடிக்கையும் பெரிதாக, மொத்த கட்சி வளர்ச்சியில் புதிய உற்சாகத்தைக் கொடுத்துள்ளதாகக் கருதமுடியாது. என்றாலும், அவருடன் கூட்டுச்சேர்ந்து ஐக்கிய தேசிய கட்சியின் ஆட்சியை வீழ்த்த முற்படும் மக்கள் விடுதலை முன்னணி, மக்கள் ஐக்கிய முன்னணி அதனைத் தவிர சிஹல உறுமய என்பவற்றிற்குச் சந்தோஷத்தை ஏற்படுத்தியுள்ளது.

### அமைச்சுப் பொறுப்பேற்றல் நடவடிக்கை

சரியாக 2003 ஆம் ஆண்டு நவம்பர் 4 ஆம் திகதி அதிகாலை 4 மணிக்கு, ஜனாதிபதி தமது அதிரடி நடவடிக்கையை ஆரம்பித்தார். எதிர்க்கட்சியான ஐக்கிய தேசிய கட்சிக்கோ அல்லது ஜனாதிபதியின் பொதுஜன முன்னணியின் எந்த ஒரு நாடாளுமன்ற உறுப்பினருக்கோ, வெளிப்படுத்தப்படாத நிலையில், தமக்கு மிகவும் நம்பிக்கையுள்ள இரண்டு அதிகாரிகளைக்கொண்டு, ஜனாதிபதி இந்த நடவடிக்கையை ஆரம்பித்துள்ளார். குறிக்கப்பட்ட இந்த இரண்டு அதிகாரம் 4 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை அதிகாலை 4 மணிக்கு அரசாங்க அச்சகர் நெவில் நாணயக்காரவின் வீட்டுக்குச் சென்று, அவரை ஜனாதிபதி மாளிகைக்கு அழைத்துவந்தனர்.

ஜனாதிபதி மாளிகையில்வைத்து, மூன்று அமைச்சர்களின் பொறுப்புகளை தாம் பொறுப்பேற்பது தொடர்பாகவும், நாடாளுமன்றத்தை 19 ஆம் திகதிவரை ஒத்திவைப்பது தொடர்பாகவும், ஏற்கனவே அச்சிடப்பட்டிருந்த அறிக்கையில் நெவில் நாணயக்கார தமது கையெழுத்தை வைத்தார். இதனையடுத்து, நெவில் நாணயக்கார சகிதம் அரசாங்க அச்சகத்திற்குச் சென்ற குறிப்பிட்ட இரண்டு அதிகாரிகளும்- ஜனாதிபதியின் நடவடிக்கைகள் தொடர்பில் வர்த்தமானி அறிவித்தல்களை அச்சிட்டனர். இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுக்கொண்டிருக்கும் வேளையில், அரசாங்க தரப்பினரோ, அல்லது எதிர்த் தரப்பினரோ ஜனாதிபதியின் நடவடிக்கையை அறிந்திருக்கவில்லை. ஆனால், ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஆதரவான சட்டத்தரணி ஒருவர் மாத்திரம், இந்த நடவடிக்கையை எப்படியோ மோப்பம் பிடித்து விட்டார். விடயத்தைக் கூறுவதற்கு அவர் முதலில் அமைச்சர் திலக் மாரப்பனவுடன் தொடர்பு கொள்ள முயற்சித்தார். எனினும், அவர் ஆழ்ந்த நித்திரையில் இருப்பதால், அவரை எழுப்பிவிட முடியாது என அவரின் மெய்ப்பாதுகாவலர்கள்- சட்டத்தரணிக்குப் பதிலளித்தனர்.

இதன் பின்னர், குறிப்பிட்ட சட்டத்தரணி பதவி பறிபோகப் போகிற விடயத்தை - அமைச்சர் ஜோன் அமரதுங்கவுக்கு தெரிவிக்க முயற்சித்தபோதும், அவரும் ஆழ்ந்த நித்திரையில் இருந்தமையால், தகவலை பரிமாறமுடியவில்லை. எனினும், சட்டத்தரணியின் முயற்சி- அமைச்சர் ரவி கருணாநாயக்கவுடன் தொலைபேசியில் தொடர்புகொண்டபோது, வெற்றியடைந்தது. அமைச்சர் ரவி கருணாநாயக்க தகவல் கிடைத்ததுமே, விரைந்து செயற்பட்டார். என்றாலும், அந்தவேளையில் ஜனாதிபதியின் அதிரடி நடவடிக்கை வெற்றிகரமாக முடிவுக்கு வந்துவிட்டது. இதனையடுத்து, விடயம் ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளர் மலிக் சமரவிக்கிரம - நியூயோர்க்கில் தங்கியிருந்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்குத் தகவல் அனுப்பினார்.

இந்தவேளையில், பிரதமரும் ஆழ்ந்த நித்திரையில் இருந்தார். எனினும், மலிக் சமரவிக்கிரமவின் தகவலுக்குப் பிரதமர் பதில் அளித்தார். அவர் தகவலைக் கேட்டு சற்றுப் பதற்றம்கொண்டாலும், தமது அரசியல் அனுபவத்தைக் கொண்டு, அந்த தகவலைப் பெரிதாக எடுத்துக்கொள்ளவில்லை. கட்சியின் தலைவர் என்ற பொறுப்பில் உடனடியாக அவர் மலிக் சமரவிக்கிரமவிடம் - "எதற்கும் அஞ்சவேண்டாம், நிலைமை எங்களுக்கே சாதகமாக இருக்கிறது. எனவே, நீங்கள் கூடுமானவரை ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களை கொழும்புக்கு அழைத்து, நாடாளுமன்ற பெரும்பான்மையை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள். ஜனாதிபதிக்கு அவரின் அதிகாரம் தொடர்பில் இந்தளவு நடவடிக்கையை மாத்திரமே எடுக்க முடியும். எனவே, அவருக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதைக் காட்டிலும், நாடாளுமன்றமே எமது அதிகாரத்தின் மையமாக இருப்பதால், அங்குள்ள பெரும்பான்மையை நாம் உறுதிப்படுத்திக் கொண்டால், நாம் எதனையும் சாதிக்கலாம்" எனக் கூறினார்.

அதன்படியே, அனைத்து ஏற்பாடுகளும் செயப்பட்டன. ஜனாதிபதிக்கு எதிராக குற்றவியல் பிரேரணையைக் கொண்டுவரவேண்டும் என கடும்போக்கைக் கொண்டிருந்த ஐக்கிய தேசியக் கட்சியினர் - தமது நாடாளுமன்ற பெரும்பான்மையை நிரூபிக்கும் உடன்பாட்டுக்குவநதனர். அதனடிப்படையில் தற்சமயம் பெரும்பான்மையை நிரூபிப்பதற்கான 113 ஆசனங்களைக் காட்டிலும், 129 ஆசனங்களின் உறுப்பினர்களது ஆதரவை ஐக்கிய தேசியக் கட்சி பெற்றுள்ளது. எனவே, ஒத்திவைக்கப்பட்டுள்ள நாடாளுமன்ற அமர்வை மீண்டும் கூட்டுமாறு


திலக் மாரப்பன

கோரும் அதிகாரம், அதற்கு கைகூடியுள்ளது. ஜனாதிபதியின் நகர்வு தொடர்பில், தமிழீழ விடுதலைப் புலிகள் - உத்தியோகபூர்வமாக அறிக்கை எதனையும் வெளியிடாமை, அவர்களின் அரசியல் சாணக்கிய நகர்வைப் பிரதிபலிப்பதாகக் கொழும்பின் அரசியற்தரப்புகள் கருதுகின்றன.

அறிக்கைகள் மூலமே அரசியல் நடத்தப்பட்டுக்கொண்டிருக்கும் இலங்கையில், அமைதியாக இருந்து நகர்வை அவதானிக்கும் நிலைப்பாடு அவர்களின் அரசியல் சாணக்கியத்தை எடுத்துக்காட்டுகிறது.

இந்தநிலையில், அடுத்து கொழும்பின அரசியலில் நடக்கப்போகும் செயற்பாடுகள் என்னவாக இருக்குமென எதிர்வு கூறிப்பார்ப்போம்.

நாடாளுமன்றத்தில் ஐக்கிய தேசியக் கட்சி தமது பெரும்பான்மையை நிரூபிக்குமானால், அது ஜனாதிபதிக்குச் செல்வாக்குச் சிக்கலை ஏற்படுத்தும். இந்தநிலையில், ஜனாதிபதி நாடாளுமன்றத்தைக் கலைத்துத் தேர்தல் ஒன்றை வைக்கலாம்.

ஜனாதிபதியின் கட்சி - நாடாளுமன்ற நம்பிக்கையை வென்றெடுக்குமானால், அது இதுவரை ஜனாதிபதி கூறிவந்த மாற்று அரசாங்கத்துக்கு வழிவகுக்கும்.

அத்துடன், அரசியல் நெருக்கடிக்குத் தற்காலிகத் தீர்வையும்தரும். என்ன நடக்கப் போகிறது என்பதெல்லாம் நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் இரண்டு கட்சிகளினதும் உறுப்பினர்கள் விலைபோகும் செயற்பாட்டிலேயே தங்கியுள்ளது.

ஏற்கனவே, பலகோடி ரூபாய்கள் இரண்டு தரப்பிலும் நிர்ணயிக்கப்பட்டிருப்பதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன. இந்தநிலையில், கோடிரூபாய்கள் இரண்டு கட்சிகளினதும் 10 இற்கு மேற்பட்ட உறுப்பினர்களை ஆட்கொள்ளுமா? அல்லது கட்சி நலன் அவர்களை நேர்வழியில் செல்ல அனுமதிக்குமா? என்பதைப் பொறுத்தே அடுத்த நகர்வுகள் இடம்பெறவுள்ளன. இதனையெல்லாம்மீறி, மத்தியில் தேசிய அரசாங்கம் ஒன்று ஏதாவது நாட்டின் மத்தியஸ்தத்துடன் ஏற்படுத்தப்படுமானால், அது இலங்கையின் எதிர்காலத்தைப் பிரகாசமானதாக்கும். அது நடைபெறுமா? கேள்வி தொக்கி நிற்கிறது.

# தெற்காசியாவின் சமநிலையைப் பேணுவதற்காக பாகிஸ்தானின் அணுஆயுத பலம் அதிகரிக்கப்படும்

## பாகிஸ்தானிய அதிபர் முஷாரப் தெரிவிப்பு

தெற்காசியாவில் இந்தியாவின் அணுஆயுதபலம் அதிகரித்துள்ளதால் - அதன் சமநிலையைப் பேணுவதற்கு தாமும் அணுஆயுதபலத்தை அதிகரிக்கப்போவதாக, பாகிஸ்தான் அதிபர் முஷாரப் தெரிவித்தார்.

மூன்று நாள் விஜயமொன்றை மேற்கொண்டு தென்கொரியா சென்ற பாகிஸ்தான் அதிபர் பர்வேஷ் முஷாரப் பத்திரிகையாளர்களிடம் மேற்கண்டவாறு தெரவித்தார்.

மேலும் 1998 ஆம் ஆண்டு பாகிஸ்தான் நடத்திய அணுஆயுதப் பரிசோதனைக்கு இந்தியாவின் அச்சுறுத்தலே காரணம் எனவும் அவர் தெரிவித்தார்.

பாகிஸ்தானின் அணுகுண்டு உற்பத்தியின் தந்தை எனக் கருதப்படுகின்ற அப்துல் குடீர்கான் பலமுறை வடகொரியாவுக்கு விஜயம் மேற்கொண்டமை குறுகிய தூரம் செல்லக்கூடிய எறிகணைகணைக் கொள்வனவு செய்வதற்கு மாத்திரமே எனவும் முஷாரப் குறிப்பிட்டார்.

அதேவேளை, இனிமேல் குறுந்தூர எறிகணைகள் தொடர்பான தொழில்நுட்பத்தை மாத்திரம் பெற்றுக்கொண்டு தற்போது டாக்டர் கான் தலைமையில் பாகிஸ்தானிலேயே அவற்றைத் தயாரிக்கவிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

வடகொரியாவிடம் இருந்து அணுசக்தியில் இயங்கும் ஏவுகணைகளை பாகிஸ்தான் கொள்வனவு செய்ததாக முன்னர் அமெரிக்கா குற்றஞ்சாட்டி வந்தது குறிப்பிடத்தக்கது.

## ஈராக்கிலுள்ள இரு கிளைகளை மூடிவிட சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் முடிவு!

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் பாக்தாத், பஸ்ணா ஆகிய பகுதிகளில் அமைந்துள்ள கிளைகளை தற்காலிகமாக மூடிவிடுவதற்கு அதன் தலைமையகமான ஜெனிவா தீர்மானித்துள்ளது. ஒக்ரோபர் 27 ஆம் திகதி பக்தாத்தில் நடைபெற்ற செஞ்சிலுவைச் சங்கத்தின் தலைமைக் காரியாலயத்தின் மீதான குண்டுத் தாக்குதலின் பின்னரே மேற்கண்ட முடிவை எடுத்துள்ளதாக, சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் பேச்சாளர் புளோரியன் வெஸ்ட்பால் தெரிவித்தார்.

30 வெளிநாட்டவரையும், 300 ஈராக்கியர்களையும் உள்ளடக்கியதாக - சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் ஈராக்கில் இதுவரை செயற்பட்டுவந்தமை குறிப்பிடத்தக்கது.

## லைபீரிய முன்னாள் ஜனாதிபதியின் பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டுள்ளது!



லைபீரியாவின் முன்னாள் ஜனாதிபதியான சாள்ஸ் ரெயிலரின் கிழக்கு நைஜீரியாவிலுள்ள இல்லத்தைச் சுற்றி பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அமெரிக்க அரசு ரெயிலரை கைது செய்வதற்கு 2 மில்லியன் வரை சன்மானம் வழங்க முன்வந்த பின்னரே - நைஜீரிய அரசு முன்னாள் லைபீரிய ஜனாதிபதியின் பாதுகாப்பை பலப்படுத்தியுள்ளது.

மனித இனத்திற்கெதிராக தனது ஆட்சிக் காலத்தில் ரெய்லர் நடத்திய படுகொலைகளுக்காக அவர் தண்டிக்கப்படவேண்டும் என அமெரிக்க அரசு தெரிவித்துள்ளது.

போர்க்காலக் குற்றவாளிகளுக்கு தண்டனை கொடுப்பதற்கென சையரலோனில் பிரத்தியேகமாக அமைக்கப்பட்ட நீதிமன்றம் ஒன்று செயற்பட்டுவருகின்றது.

## உலக நோக்கு

# இஸ்ரேலியப் படை தாக்கு; பலஸ்தீனச் சிறுவன் பலி!



மொகமம் அல் ஹயாட் என்ற 10 வயதுடைய பலஸ்தீனிய சிறுவன் ஒருவன் தனது நண்பனுடன், பறவைகளைப் பிடிப்பதற்காக வலையுடன் சென்றவேளை, இஸ்ரேலியப் படையினர் குண்டுத்தாக்குதல் நடத்தியபோது, அவனது நெஞ்சில் தாக்கியதால் அச்சிறுவன் பரிதாபகரமாக மரணமடைந்துள்ளான்.

பலஸ்தீனியர்கள் செல்வதற்குத் தடை செய்யப்பட்ட பகுதியிலேயே இந்தச் சம்பவம் நடைபெற்றுள்ளது. தாக்குதல் ஒன்றுக்காக, குண்டுகளை மண்ணுக்குள் புதைப்பதற்கு ஏதுவாக வயர்களுடன் இந்தச் சிறுவன் சென்றதாக இஸ்ரேல் படையினர் கருதியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பிறிதொரு தாக்குதலில் சான் யூனிஷ் எனப்படும் தெற்கு காஸாப் பகுதியில் அமைந்த பிரதேசத்தில் இரு பலஸ்தீனப் போராளிகள் கொல்லப்பட்டிருந்தார்கள். கொல்லப்பட்டவர்கள் தமது உறுப்பினர் என அல்சுகுசா மாற்றயன் எனப்படும் முஸ்லிம் இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் தெரிவித்துள்ளனர்.

மேலும் காஸாவின் மத்திய பகுதியில் அமைந்துள்ள முகாமொன்றில் கமாஸ் இயக்கத்தைச் சேர்ந்த போராளி ஒருவர் கொல்லப்பட்டுள்ளார்.

இதனிடையே - இஸ்ரேல் பலஸ்தீனியர்கள் மீதான கட்டுப்பாடுகளை தளர்த்தும் நோக்கில் ரமலாவில் சோதனைச் சாவடி ஒன்றை இஸ்ரேலிய படையினர் நிறுவிய பின் மேற்கூறப்பட்ட சம்பவங்கள் நடைபெற்றன.

## ஈராக்கில் நடந்த தாக்குதலில் இரு அமெரிக்க படையினர் பலி!

ஈராக்கின் தென்பகுதியில் அமைந்த பலூஜாவில், அமெரிக்க இராணுவத்தின் 82 ஆவது அணியின் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் 2 படையினர் கொல்லப்பட்டனர். மேலும் ஒருவர் காயமடைந்தார்.

தாக்குதல் நடைபெற்ற பிரதேசம் சதாம் ஹுசைனின் ஆதரவாளர்களான சுனி முஸ்லிம்கள் வாழும் பிரதேசமாகும்.

இதேவேளை, இந்த மாதம் ஈராக்கில் கொல்லப்பட்ட அமெரிக்கப் படையினரின் எண்ணிக்கை 34 ஆக உயர்ந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## சவுதியைத் தாக்குவதற்கு அல் - கொய்டா திட்டம்

சவுதி அரேபியாவில் தாக்குதல் ஒன்றை நடத்துவதற்கு அல்-கொய்டா திட்டமிட்டுள்ளதாகவும், இதனால்- சவூதியில் உள்ள அமெரிக்கத் தூதுவராலயத்தை மூடவுள்ளதாக, நேற்று முன்தினம் அமெரிக்கா அறிவித்துள்ளது.

கடந்த வியாழக்கிழமை சவூதியின் பாதுகாப்புப் படையினர் நடத்திய திடீர் சோதனையின்போது அல்-கொய்டாவைச் சேர்ந்த மூன்று முஸ்லிம் தீவிரவாதிகள் கொல்லப்பட்டதைத் தொடர்ந்தே அமெரிக்கா இவ்வாறு அறிவித்துள்ளது.

சவூதியில் உள்ள அமெரிக்கத் தூதுவராலயம் தொடர்ந்தும் தீவிரவாதிகளின் அச்சுறுத்தல்களுக்கு உட்பட்டுவருவதாக தூதுவராலய அதிகாரிகள் தெரிவித்திருந்தனர். இதனால், ரியாட்டில் அமைந்துள்ள தூதுவராலயத்தையும், ஜெடா, டகரான் ஆகிய இடங்களில் அமைந்துள்ள அமெரிக்காவின் காரியாலங்களையும் தற்காலிகமாக மூடிவிட அமெரிக்கா தீர்மானித்துள்ளது.

இதேவேளை, சவூதி அரேபியாவில் வாழும் 40 ஆயிரம் அமெரிக்கர்கள் மற்றும் ஐரோப்பியர்களை அவதானமாக இருக்குமாறும் அமெரிக்கா கேட்டுள்ளது..

# அரபாத் தேர்ந்தெடுக்கும் பாதுகாப்பு அமைச்சரை ஏற்றுக்கொள்வதாக பிரதமர் கூரே தெரிவிப்பு!

ஞாயிற்றுக்கிழமை யசீர்அரபாத்தின் கட்சியான பாத்தாவின் மத்தியகுழுக் கூட்டத்தில் - பாகாப்பு அதிகாரியாக அரபாத் தேர்ந்தெடுப்பவரை தான் ஏற்றுக்கொள்வதாக பிரதமர் கூரே தெரிவித்துள்ளார்.

இதன்மூலம் இரு தலைவர்களிடையேயும் இதுவரை நீடித்த அதிகாரப்போட்டி முடிவடைந்துள்ளது.

ஜெனரல் ராசர் யுசெப்பை தேசிய பாதுகாப்புச்சபைக்கு தேர்ந்தெடுக்குமாறு அகமட் கூரே தெரிவித்த கருத்தை யசீர் அரபாத் ஏற்கமறுத்தமையால் அமெரிக்க, இஸ்ரேல் ஆகிய நாடுகளின் கண்டனத்துக்கு அரபாத் ஆளானார்.

இதேவேளை, அரபாத்தின் நம்பிக்கைக்குரியவரான சுகம் பலவி என்பவரை உள்நாட்டு அமைச்சராக தேர்ந்தெடுப்பதற்கு அரபாத்தின் பாத்தா அமைப்பு சம்மதம் தெரிவித்துள்ளது.

*சமாதானத்தை நல்லமுறையில் முன்னெடுத்துச்செல்வதாயின்* புதிய சுதந்திரமான அரசு ஒன்றை நிறுவவேண்டும் என, அமெரிக்காவும், இஸ்ரேலும் அரபாத்திடம் கேட்டுள்ளன.

## ஊர்சுற்றி எழுதுவது

வங்கியில் காசோலையை மாற்றி நாலரை லட்சம் ரூபாவுடன் மோட்டார் சைக்கிளில் சென்றுகொண்டிருந்த ஒரு வர்த்தகரை இருவர் வழிமறித்து மிளகாய்த்தூளை அவர் முகத்தில் வீசிவிட்டு பணத்தைப் பறித்துச் சென்றுள்ளனர்.

இந்தச் சம்பவம் கடந்த 4 ஆம் திகதி நண்பகல் இம்புல்கடச் சந்தியில் நடந்துள்ளது. அக்குரண்ணைப் பொலிஸார் இந்தச் சம்பவம் பற்றி விசாரித்துவருகின்றனர்.

களுத்துறையில் கடந்த ஆறாம் திகதி களுத்துறை பிரதான தபாற்கந்தோருக்குள் ஆயுதம் தாங்கிய இருவர் புகுந்து சுமார் ஐந்து லட்சம் ரூபா கொண்ட தபாற் பைகளை கொள்ளையடித்துச் சென்றிருக்கின்றனர்.

ஓய்வூதிய கொடுப்பனவுகளுக்காக இந்தப் பணம் - இதர சில தபாற் கந்தோர்களுக்கு அனுப்பப்படுவதற்காக இங்கு வந்திருந்தனவாம்.

களுத்துறைப் பொலிஸார் இந்தச் சம்பவம் பற்றி விசாரணை செய்கின்றனர்.

இந்தச் செய்திகள் கடந்த சில தினங்களில் கொழும்பில் இருந்து வெளிவரும் ஆங்கிலத் தினசரிகளில் வெளிவந்தவை.

பல லட்சம் ரூபா அரிசி மூடைகளுடன் லொறி ஒன்று கடத்திச்செல்லப்பட்டுள்ளதாகவும் ஒரு பத்திரிகை செய்தி வெளியிட்டிருந்தது.

இந்தச் செய்திகள் எல்லாம் அதிக முக்கியத்துவம் கொடுக்கப்படாமலேயே வெளியிடப்பட்டு இருக்கின்றன.

புத்தள கிராமிய வங்கிக்குள் நுழைந்த ஆயுதக் கோஷ்டி ஒன்று அங்கிருந்த ஊழியர்களைப் பயமுறுத்தி, 55 ஆயிரம் ரூபாவைக் கொள்ளையடித்துச் சென்றதாம்.

வெற்றவாயாவில் ஒரு வீட்டில், அந்த வீட்டுக்காரர் வெளிநாடு சென்றிருந்தபோது மின்சாதனங்கள் கொள்ளையடிக்கப்பட்டிருக்கின்றன. இவற்றின் பெறுமதி 2 இலட்சம் ரூபாவாம்.

செவனகல என்ற இடத்தில் ஒரு வர்த்தகரின் வீட்டிற்குள் புகுந்த ஆயுதக்குழு - தங்கநகைகள் மற்றும் ரொக்கமாக 2 இலட்சத்து 75 ஆயிரம் ரூபாவைக் கொள்ளையடித்துச் சென்றுள்ளது.

கொழும்பு கொம்பனித் தெருவிலும் கொள்ளைக் கோஷ்டி ஒன்று 6 இலட்சம் ரூபா பெறுமதியான நகைகளைக் கொள்ளையடித்துச் சென்றிருக்கிறதாம்.

ஆங்கிலப் பத்திரிகைகளிலும், சிங்களப் பத்திரிகைகளிலும் இந்தச் செய்திகள் அதிக முக்கியத்துவம் கொடுக்கப்படாமல் வெளியிடப்படுகின்றன.

இதே சம்பவங்கள் - இவற்றைவிடச் சிறிய சம்பவங்கள் கிழக்கு மாகாணத்தில் ஒரு மூலையில் நடந்தாலும் அதைப் பெரிதுபடுத்தி, அதிலும் பாதிக்கப்பட்டவர் ஒரு இஸ்லாமியராக இருந்துவிட்டால் உடனடியாகவே புலிகள் கடத்திச்சென்றார்கள். அல்லது கொள்ளையடித்தார்கள் என்று இந்தப் பத்திரிகைகள் வெளியிடத் தயங்குவதில்லை.

கடந்த சில மாதங்களாகவே கொலைகள், கொள்ளைகள், கடத்தல்கள் கிழக்கு மாகாணத்தை விடத் தென்னிலைங்கையிலேயே அதிகரித்து வந்திருக்கின்றன. இன்னமும் இவை தொடருகின்றன.

சில தினங்களுக்கு முன்னர்தான் இரத்தினக்கல் வியாபாரியான ஒரு முஸ்லிம் கோடீஸ்வரர் கொழும்பில் அவரது இல்லத்துக்கு அருகில் வைத்துக் கடத்திச்செல்லப்பட்டார். இவரிடமிருந்து பெறுமதிவாய்ந்த இரத்தினக் கற்களும் கொள்ளையடிக்கப்பட்டனவாம். பின்னர் இவரது சடலம் பொல்கொட வாவியிலிருந்து மீட்கப்பட்டிருக்கின்றது.

இந்தக் கொலை, கொள்ளை சம்பந்தமாகக் குற்றவாளிகள் பிடிபடுவார்கள் என்று நம்பலாம்.

ஆனால், இதே சம்பவம் கிழக்கு மாகாணத்தில் நடந்திருந்தால் என்ன நடந்திருக்கும்? எத்தனை ஆர்ப்பாட்டங்கள், கடையடைப்புக்கள், அறிக்கைகள், அமைச்சர்கள் பறந்துபோய் பேச்சுக்கள் நடத்துவது என்று ஒரே களேபரமாயிருக்கும்.

1970 ஆம் ஆண்டளவிலும் இப்படியான கொள்ளைச் சம்பவங்கள் தென்னிலங்கையில் நடைபெற்றன. அப்பொழுதும் இவைபற்றிப் பெரிதாக மக்கள் அலட்டிக்கொள்ளவில்லை.

மலையகப் பகுதியிலும், இலங்கையிலும் 'நாம் தமிழர் இயக்கம்' பரவிவருவதாக துவேச குருப் பத்திரிகைகள் தினமும் தொடர்ந்து செய்திகள் வெளியிட்டுவந்தன.

கோயில் அறங்காவலர் சபைக் கூட்டங்கள் நடந்தால்க் கூட 'நாம் தமிழர் இயக்கக் கூட்டங்கள்' நடந்ததாக அந்தப் பத்திரிகைகள் செய்தி வெளியிட்டுவந்தன.

1971 ஆம் ஆண்டில் ஜே.வி.பியின் ஆயுதப்புரட்சி வெடித்த பின்னர் 'நாம் தமிழர் இயக்கம் பற்றிய செய்தி எந்தப் பத்திரிகையிலும் வெளிவரவில்லை.

இன்றும்கூட தினமும் நடக்கும் கொள்ளைகளுக்கும், கடத்தல்களுக்கும் வேறெங்காவது தொடர்பிருக்கிறதா என்று சந்தேகம் தோன்றுகின்றது என்கிறார் நண்பர்.

கம்பஹா மாவட்டத்துக்குள்த்தான் படைகளிலிருந்து ஆயுதங்களுடன் தப்பியோடியவர்கள் அதிகமாக இருப்பதாகவும் வானொலியில் ஒரு செய்தி கேட்டதாக எதிர் வீட்டுக்காரர் சொல்கிறார்.

கம்பஹா மாவட்டமும் முன்னரும் பெயர் பெற்ற மாவட்டந்தான்.

ஜனாதிபதியும், பிரதமரும் அதிகாரப்போட்டியில் நானா நீயா என்று கயிறிழுப்புப் போட்டியில் இருக்கும்போது, நாட்டில் எதுவும் நடக்கும். என்னதான் நடக்காது? என்றார் நண்பர்.

1962 ஆம் ஆண்டு சதிமுயற்சி மாதிரி, இப்பொழுதும் வழிகோலுவதாக சில தினங்களுக்கு முன் ஜே.வி.பி. பிரமுகர் ஒருவர் கூறியதாக செய்தி வெளிவந்ததை கவனிக்கவில்லையா என்றார் நண்பர்.

எதைத்தான் கவனிப்பது. எதைக் கவனித்துத்தான் *என்ன? கவனிக்காவிட்டால் என்ன? எங்கள் பிரச்சினை*யைப் பற்றி யார் கவனிக்கப்போகிறார்கள்? என்றார் எதிர் வீட்டுக்காரர்.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# அரசின் வரவு-செலவுத் திட்ட அறிக்கை எப்போது நாடாளுமன்றில் சமர்ப்பிப்பது?

## அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் நாளை ஆராயப்படும்

அரசாங்கம் சமர்ப்பித்துள்ள அடுத்த ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிப்பது தொடர்பாக நாளை ஆராயப்படவுள்ளது.

நாளை நடைபெறும் அனைத்து கட்சிகளின் கூட்டத்தில் இந்த விடயம் தொடர்பாக விரிவாக ஆராயப் படவுள்ளது.

அரசாங்கத்தின் வரவு - செலவுத்திட்டத்தைஇம்மாதம் 12 ஆம் திகதி நாடாளுமன்றத்தில் சமர்ப்பிபதற்கு நிதியமைச்சர் திட்டமிட்டிருந்தார்.

இதற்கிடையில், ஜனாதிபதி, பாதுகாப்பு அமைச்சர் உட்பட மூன்று அமைச்சர்களை பதவி நீக்கியதுடன் நாடாளுமன்றத்தினை எதிர்வரும் 19 ஆம் திகதிக்கு ஒத்திவைத்திருந்தார்.இதனால், குறித்த தினத்தில் வரவு - செலவுத்திட்ட அறிக்கை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்க முடியவில்லை. இதனால் அரசியல் யாப்பில் பல நெருக்கடிகள் ஏற்பட்டுள்ளன.

இதனையடுத்து,நாளை அனைத்துக்கட்சிகளும் கூடி ஆராயவுள்ளன.

இந்தக் கூட்டத்தில் - நாடாளுமன்றை எதிர்வரும் 19 ஆம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டமை, வரவு-செலவுத்திட்டத்தை உரிய காலத்தில் சமர்ப்பிக்காமையால் ஏற்பட்டுள்ள அடிப்படை பிரச்சினைகள் தொடர்பாக இந்தச் சந்திப்பில் விரிவாக ஆராயப்படும்.

## நாற்சந்தி

அக்கா மட்டுமல்ல தம்பியும் 'அதிரடி' கொடுப்பதில் தானும் சளைத்தவரல்ல என்பதை வெளிப்படுத்தத் தொடங்கிவிட்டார். ஜே.வி.பியினரின் எடுபிடியாளாகி விட்ட அனுரா ஜனாதிபதியின் அதிரடி நடவடிக்கைமையினால் புல்லரித்துப் போயுள்ளாராம்.

ஏதோ தான் சொல்லித்தான் அக்கா அதிரடியாக நடவடிக்கைகளை எடுக்கத் தொடங்கியுள்ளார் என்று நினைத்துக் கொண்டு அக்காவுக்கு ஒருபடி மேலேபோய் அறிக்கை விடத் தொடங்கிவிட்டார்.

"முரண்டு பிடித்தால் அமைச்சர்கள் மட்டுமல்ல பிரதமர் ரணிலும் கைதுசெய்யப்பட்டுவிடுவார்" என அவர் எச்சரித்துள்ளார். ஜனாதிபதியின் ஆலோசகர் அல்லவா? அந்தத் துணிச்சலில்தான் இப்படிக் கூறுகிறார் போலும்.

இதல்ல முக்கியம்... இதைவிட பிரமாதமாகவும் மற்றொன்றையும் அவர் கூறியுள்ளார்.

இதில்தான் அவரது ஆலோசகர் அந்தஸ்து திறனாக வெளியிடப் பட்டுள்ளது.

அதாவது, 'கண்டி மற்றும் அஸ்கிரிய பீடாதிபதிகள் நாட்டின் நிலைமை தெரியாமல் அறிக்கை விடுகிறார்கள் எனவும், இவர்களில் முக்கியமானவர் கலகொட ஞானேஸ்வர தேரர் என்றும் அவர் தனது தாயை விமர்சித்தவர் என்றும் இவரது காவியுடையை ஒருநாள் பகிரங்க இடத்தில் வைத்து கழற்றுவேன்' என அவர் சூளுரைத்துள்ளார்.

'அடி சக்கை... அனுராவுக்கு வந்த ஞானம்தான் ஞானம்...' முன்னர் இதே பீடாதிபதிகளிடம் பல தடவைகள் அனுரா ஆசீர்வாதம் பெற்றதை மறந்துவிட்டார்போலும்... இனிமேல் அனுரா 'சங்கம் சரணம் கச்சாமி என்று கூறமாட்டார் என்றே நினைக்கிறேன்'... என்கிறார் ஒரு அரசியல் கிண்டல் விமர்சகர்.

தெருவாசி

## நாடாளுமன்றைக் மீண்டும் கூட்டுவதற்கு கட்சிகளின் ஆதரவைக் கோர முடிவு!

### ஐக்கிய தேசியக் கட்சி தீர்மானம்

ஜனாதிபதியினால் ஒத்திவைக்கப்பட்ட நாடாளுமன்றைக் கூட்ட கோருவதற்கு ஏனைய கட்சிகளின் ஆதரவைக் கோருவதென, ஐக்கிய தேசிய முன்னணியின் அமைச்சர்கள் உட்பட அனைவரும் ஏகமனதாக நேற்று முன்தினம் தீர்மானித்திருப்பதாக தொழில்துறை அமைச்சர் மகிந்த அமரசிங்க தெரிவித்தார்.

நாடாளுமன்றம் ஒத்திவைக்கப்பட்டமை தொடர்பாக பிரதமர் அலுவலகத்தில் நடைபெற்ற சந்திப்பை அடுத்து, பத்திரிகையாளரிடம் கருத்து தெரிவிக்கையிலேயே, அமைச்சர் அமரசிங்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், நாளையதினம் ஏனைய கட்சித் தலைவர்களுடன் நடத்தப்படவுள்ள சந்திப்பின்போது, நாடாளுமன்றைக் கூட்டுவதற்கு அவர்களதும் ஆதரவை கோருவதற்கு அமைச்சரவை ஏகமனதாகத் தீர்மானித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சட்டரீதியாக நாடாளுமன்ற ஒத்திவைப்பிற்கு எந்தவொரு உடன்பாடும் இல்லை. நாளை நடைபெறவுள்ள சந்திப்பில் நாடாளுமன்றை உடனடியாக கூட்டுமாறு ஜனாதிபதியிடம் கேட்கப்போவதாக அவர் தெரிவித்தார்.

## அரசியல் குழப்ப நிலையையடுத்து புலிகள் கூட்டத்தை ஒத்திவைத்தனர்

(மட்டக்களப்பு)

நாட்டில் ஏற்பட்டுள்ள அரசியல் குழப்பத்தை அடுத்து மட்டக்களப்பில் நடைபெறவிருந்த கூட்டத்தை விடுதலைப்புலிகள் ஒத்திவைத்துள்ளனர்.

மட்டக்களப்பு வவுணதீவுப் பிரதேச செயலகத்தில் நேற்றுக் காலை மட்டக்களப்பு மாவட்ட தமிழ் - முஸ்லிம் விவகாரங்கள் தொடர்பாக ஆராயும், உப குழுக் கூட்டம் நடைபெறவிருந்ததாகவும், நாட்டில் ஏற்பட்டுள்ள அரசியல் நிலைமைகள் காரணமாக இந்தக் கூட்டத்தை நடத்தமுடியாதென தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கம் சார்பில் மட்டக்களப்பு கண்காணிப்புக் குழு அலுவலகத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிய வருகிறது.

இதனையடுத்து இந்த உப குழுக்கூட்டம் ஒத்திவைக்கப்பட்டுள்ளது. இதுபற்றி கண்காணிப்புக் குழுத் தலைவர் தமக்கு தெரியப்படுத்தியிருப்பதாக முஸ்லிம் மக்கள் சார்பில் பிரதி அமைச்சர் சேகுதாவுத் தெரிவித்துள்ளார்.

## வடகிழக்கு அதிபர்கள் இலண்டன் செல்கிறார்கள்

வடக்கு - கிழக்கினைச் சேர்ந்த 7 முதலாம் தர அதிபர்கள் உட்பட 34 பேர் கல்வி அமைச்சின் புலமைப் பரிசில் திட்டத்திற்கு அமைவாக இன்று லண்டன் பயணமாகின்றனர்.

18 நாட்கள் கொண்ட இந்த சுற்றுப்பயணத்தில் லண்டனில் உள்ள பேமிங் ஹாம் பல்கலைக்கழகத்தில் முகாமைத்துவ கற்கைநெறி சம்பந்தமான விரிவுரைகளில் இவர்கள் நாளை தொடக்கம் எதிர்வரும் 28 ஆம் திகதி வரை கலந்துகொள்வார்கள். கற்கைநெறியினை முடித்துக் கொண்டு எதிர்வரும் 30 ஆம் திகதி இவர்கள் நாடு திரும்புவார்கள் எனத் தெரிவிக் கப்படுகிறது. (10,04)

## தொலைபேசி இலக்கங்கள் மாற்றம்

(கொழும்பு)

சிறிலங்கா ரெலிக்கொம் மற்றும் சன்ரெல் ஆகியவற்றினால் வழங்கப்பட்ட குறியீட்டு இலக்கங்கள் மாற்றப்பட்டுள்ளன.

075 என்ற குறியீட்டு இலக்கம் 0115 எனவும் 074 என்ற குறியீட்டு இலக்கம் 0114 எனவும் மாற்றப்பட்டுள்ளதாக அறிவித்துள்ளனர்.

## அரசு புலிகள் - சமாதானப் பேச்சு சர்வதேச ஆதரவைப் பெற்றுள்ளது!

### பிரித்தானிய வெளிவிவகார அமைச்சர்

(கொழும்பு)

விடுதலைப் புலிகளுக்கும், அரசாங்கத்திற்கும் இடையில் நடைபெறும் சமாதானப் பேச்சுக்கள் சர்வதேசத்தின் ஆதரவைப் பெற்றுள்ளது. இவ்வாறு பிரித்தானிய வெளிவிவகார அமைச்சர் தெரிவித்துள்ளார்.

பொருளாதார மறுசீரமைப்பு விஞ்ஞான அமைச்சர் மிலிந்த மொறகொட - பிரித்தானிய வெளிவிவகார அமைச்சரைச் சந்தித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது,

ஜனாதிபதி அரசியலில் சில தினங்களாக ஏற்படுத்திய திடீர் மாற்றங்களால் சமாதானப் பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிப்பதில் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, விடுதலைப் புலிகள் மேற்கொண்டு வரும் சமாதான நடவடிக்கைக்கு, தாம் பூரண ஒத்துழைப்பு வழங்குவதாகவும், தற்போது நடந்துள்ள பேச்சுக்கள் சர்வதேச சமூகத்தின் ஆதரவைப் பெற்றுள்ளது.

இலங்கையின் சமாதான முன்னெடுப்புகளுக்கும் ஜனநாயக செயற்பாடுகளுக்கும் பூரண ஆதரவு வழங்குவதாகவும் அவர் தெரிவித்தார்.

## சமாதானப்...

வேண்டும். இதற்கு நாடாளுமன்றம் முக்கிய பங்கு வகிக்கின்றது.

தற்போதைய சமாதான சூழலில், மக்கள் பல்வேறு நன்மைகளைப் பெற்றுவருகின்றனர். இதற்கு ஜனாதிபதியின் நடவடிக்கை இடையூறாக அமைந்துள்ளது.

ஜனாதிபதி அரசியலில் மாற்றத்தை ஏற்படுத்திவருவது அரசியல் நோக்கம் கொண்டது. இதனால், தற்போது அரசியலில் ஸ்திரமற்ற தன்மை ஏற்பட்டுள்ளதாகவும் பி.பி.சி தெரிவித்துள்ளது.

## கூட்டமைப்பு....

திரகுமார் பொன்னம்பலம், செல்வம் அடைக்கலநாதன், ரவிராஜ், சந்திர நேரு, துரைரட்ணசிங்கம் மற்றும் ரெலோவின் முதல்வர் ஸ்ரீகாந்தா ஆகியோரும் கலந்துகொண்டனர்.

ஒன்றரை மணிநேரம் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் நாட்டின் தற்போதைய அரசியல் நெருக்கடி நிலைமை தொடர்பாகவும், ஒத்திவைக்கப்பட்ட நாடாளுமன்றத்தினை மீண்டும் கூட்டுவது தொடர்பாகவும் அறிக்கை ஒன்றை இன்று வெளியிடுவது எனவும் தீர்மானிக்கப்பட்டது.

## முன்னாள்....

பெற்றிருந்தார்.

1979 ஆம் ஆண்டு பயங்கரவாத தடைச்சட்டத்தைப் பிரகடனம் செய்த ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தன அப்போது பிரிகேடியராக இருந்த வீரதுங்கவை வடபகுதிக்கு அனுப்பியிருந்தார்.

1985ஆம் ஆண்டு முதல் முறையாகக் கூட்டு நடவடிக்கையின் தளபதி பதவி உருவாக்கப்பட்டபோது, அவர் முதலாவது தளபதியாக நியமிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

## ஜனாதிபதி....

அமைச்சின் செயலானர் கடிதம் எழுதியிருந்ததாக குற்றஞ்சாட்டு சுமத்தப்பட்டுள்ளது.

இது அமைச்சின் செயலாளர் அதிகார வரம்பை மீறிய செயல் எனத் தெரிவித்த ஜனாதிபதி செயலக வட்டாரங்கள் அவருக்கு எதிராக இது தொடர்பில் ஒழுக்காற்று விசாரணைகள் நடத்தப்படவுள்ளதாவும், தெரிவிக்கப்படுகிறது.

## ஜனாதிபதி....

டும். ஆனால், அமைச்சர் ஒருவருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையை கொண்டு வருவதற்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மை தேவையில்லை. சாதாரண பெரும்பான்மையுடனேயே அதனை நிறைவேற்ற முடியும் என் றும், இதனால் மூன்று நம்பிக்கை யில்லா பிரேரணைகள் கொண்டுவர தீர்மானித்துள்ளதாக டபிள்யூ.ஜே. எம். லொக்குபண்டார தெரிவித்தார்.

## ஐ.தே.க உறுப்பினர்......

விக்கப்பட்டுள்ளது.

ஐ.தே.முன்னணி அரசாங்கத்திற்கு எதிராக மேற்கொண்டுவரும் நடவடிக்கைகளுக்கு ஆதரவாக ஜே.வி.பி, பொ.ஐ.மு, சிஹல உறுமய ஆதரவாளர்கள் நேற்றுமுன்தினம் பேரணியொன்றை நடத்தினர். இந்தப் பேரணி பொரளைப் பகுதியில் வந்துகொண்டிருந்தபோது, அமைச்சர் ஒருவரின் ஆதரவாளர்கள் - பேரணியில் கலந்துகொண்டோர் மீது தாக்குதல் நடத்தியதாகவும், இதில் ஜே.வி.பியின் மாகாண சபை உறுப்பினர் லக்வுமன் நிபுலாராய்ச்சி உட்பட, இருவர் படுகாயமடைந்து கொழும்பு போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக, தேசிய எதிர்ப்பு முன்னணி விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமைச்சர் எம்.எச்.முகமட்டின் ஆதரவாளர்களே, இத்தாக்குதலை மேற்கொண்டதாகவும் இந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஏழு இராணுவ.....

மல்லவராச்சி, மேஜர் ஜெனரல் சிசிர விஜே சூரிய ஆகியோருக்கே பதவியை விட்டு விலகவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

மேற்படி அதிகாரிகளின் சேவை நீடிப்பு செய்யப்பட வேண்டுமானால், ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க புதிய சட்ட ஒழுங்குகளை அமுல் படுத்தவேண்டும். அல்லது முன்னாள் பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன முன்வைத்த திட்டத்தை நடைமுறைப்படுத்தவேண்டும்.

தற்போதுள்ள சட்டங்களின் பிரகாரப்படி, இராணுவ அதிகாரிகளுக்கு சேவை நீடிப்பு வழங்கப்படுவது உயர்நீதிமன்றத் தீர்ப்புக்கு முரணானதாக அமையுமெனக் கூறப்படுகின்றது.

பாதுகாப்பு அமைச்சு அதிகாரியொருவர் இது குறித்து கருத்து வெளியிடும்போது - கேள்விப் பத்திரங்களுடன் தொடர்புடைய, பெருமளவு முடிவுகள் தீர்க்கப்படாத பிரச்சினையாக உள்ளன என அவர் தெரிவித்தார்.

கடந்த வருடம் - அரசாங்க வர்த்தமானி மூலம் மேஜர் ஜெனரல் தரத்தைச் சேர்ந்த அதிகாரிகள் மூன்று வருடங்கள், 55 வயதினை அடையும் வரை சேவை நீடிப்புப் பெறமுடியும் எனக் குறிப்பிடப்பட்டிருந்தது. ஆனால் பாதுபாப்பு விவகாரங்களில் ஜனாதிபதிக்கு கூடுதல் அதிகாரமுள்ளதென உயர்நீதி மன்றம் தீர்ப்பளித்துள்ளது. அரசாங்கத்தின் இந்த முடிவு செல்லுபடியற்ற தன்மையை அடைந்துள்ளது. இதனாலேயே ஏழு மேஜர் ஜெனரல் அதிகாரிகளுக்கும் விலகவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.




இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 09.11.2003 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.